Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10.00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

Job! With High Salary
Follow
Cima_UK, BIT
(O/L,A/L not necessary)
MCS 324,Palaly Road,Parameswara Junction
www.mcsitcampus.org
SMS your name & course to 772 395 895 & Get Schol.



முரசு – 01 | திருவள்ளுவர் ஆண்டு 2041 | தை 05 | புதன்கிழமை | (19.01.2011) | பக்கங்கள் 12 | ஓசை – 111

## அரங்கத்துடனான தேர்தல் உறவு கூட்டமைப்புக்குள் கிளம்பும் எதிர்ப்பு


### தேர்தல் கூட்டு உடையும் சாத்தியம்

(கொழும்பு)

விரைவில் நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் தமிழ் கட்சிகளின் அரங்கத்திலுள்ள சில கட்சிகளுடன் இணைந்து போட்டியிடும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் முடிவிற்கு கட்சிக்குள் எதிர்ப்பு கிளம்பியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இதனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனித்துப் போட்டியிடும் சாத்தியம் காணப்படுவதாக கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை, சிவாஜிலிங்கம் மற்றும் வரதராஜப் பெருமாள் ஆகியோரை அமைக்கப்படவுள்ள தேர்தல் கூட்டமைப்பில் இணைத்துக் கொள்ளாவிட்டால் தாங்களும் (11ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் கடல் ஸ்கூட்டர் ஓட்டிப்பார்த்தார் ஜனாதிபதி



(கொழும்பு)

அண்மையில் யாழ்.விஜயம் செய்த ஜனாதிபதி கடந்த 15ஆம் திகதி சங்குப்பிட்டி பாலத்தைத் திறந்துவைத்த பின்னர், அன்றிரவு வடபகுதியில் தங்கியுள்ளார். அடுத்த நாள் காலை அவர் காங்கேசன்துறைக் கடலில் புலிகள் தாக்குதலுக்காகப் பயன்படுத்திய அதிவேக சீஸ் ஸ்கூட்டரை ஓடிப்பார்த்துள்ளார். சுமார் 250 குதிரை வலுக்கொண்ட அதிவேக சீஸ் ஸ்கூட்டர்களை புலிகள் தமது கடற் (12ஆம் பக்கம் பார்க்க)

# புலிகள் நடத்திய தீவிர ஆயுதப் போராட்டம் அரசியல் கலாசாரத்தை அழித்து விட்டது!

## அரபு உலகின் ஊடகப் பார்வை

(கொழும்பு)

**கடந்த காலத்தில் புலிகள் ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்த அதே காலப்பகுதியில் வடக்கில் நிலவிய ஜனநாயக அரசியல் கலாசாரத்தையும் இல்லாது ஒழித்துவிட்டனர். அமைதிப் பேச்சுக்களிலும், அரசியலமைப்பு நடை முறைகளிலும் நம்பிக்கை கொண்டிருந்த தமிழ்த் தலைவர்கள் படுகொலை செய்யப்பட்டமையும் இலங்கையைப் பொறுத்த வரையில் மிகவும் துயரமான விடயமாகும் என்று வளைகுடாப் பிராந்தியத்தைச் தளமாகக் கொண்ட அரபு ஊடகம் ஒன்று தனது ஆசிரியர் தலையங்கத்தில் தெரிவித்துள்ளது.** (12ஆம் பக்கம் பார்க்க)

## யாழில்.இந்திய விசா விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்டுள்ள இந்திய துணைத் தூதரகத்தின் ஊடாக விசா விநியோகிக்கும் வேலைத்திட்டத் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இருந்து இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், நாளொன்றுக்கு 50 தொடக்கம் 100 விசாக்கள் விநியோகிக்க முடியுமென யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதரகத்தின் கொன்சல் ஜெனரல் வி.மகாலிங்கம் தெரிவித்துள்ளார்.

இந்த இந்திய துணைத் தூதரகத்தின் மூலம் மக்கள் நன்மையடைய முடியுமென அவர் குறிப்பிட்டார்.

## இந்திய இராணுவச் சிப்பாய் ஒருவர் யாழ்.பெண்ணுக்கு கன்னத்தில் முத்தம்

### பொதுமக்கள் சிப்பாயை எச்சரித்தனர்

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத் தூதரகத்தில் கடமையாற்றும் இந்திய இராணுவ வீரர் ஒருவர், யாழ். தமிழ் பெண் ஒருவருக்கு பொது இடம் ஒன்றில் வைத்து முத்தம் கொடுத்த விடயம் பெரும் சர்ச்சையைக் கிளப்பியுள்ளது.

பொதுமக்கள் கூடும் இடம் ஒன்றில் இடம்பெற்ற இந்த முத்தமிடும் சம்பவத்தை மூடி மறைக்க முயற்சி எடுக்கப்பட்ட போதிலும், அது தற்போது வெளியே அம்பலமாகிவிட்டது.

இலங்கைக்கு விஜயமொன்றை மேற்கொண்டுள்ள இந்திய விமானப்படைத் தளபதி கொழும்பிலுள்ள இந்திய இராணுவ வீரர்களின் நினைவுத் தூபிக்கு மரியாதை செலுத்தியுள்ள நிலையில், யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதுவராலயத்தில் கடமை புரியும் இந்திய இராணுவ வீரர் ஒருவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தமிழ்ப் பெண் ஒருவருக்கு முத்தம் கொடுத்துள்ளாரெனத் தகவல்கள் (11ஆம் பக்கம் பார்க்க)

## ஊடகங்கள் மீதான தாக்குதல்; கொழும்பில் நேற்று ஆர்ப்பாட்டம்



(கொழும்பு)

ஊடகங்கள் மீது நடாத்தப்படும் தாக்குதல்களைக் கண்டித்தும் சம்பந்தப்பட்டவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்தும்படி கோரியும் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்றுக் கொழும்பில் இடம்பெற்றது.

புறக்கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக இடம்பெற்ற இந்தக் கண்டன ஆர்ப்பாட்டத்தில் பெருந்தொகையான ஊடகவியலாளர்கள் பங்குபற்றினர்.

புதிய இடது சாரி முன்னணியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரட்னவும் இவ் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

### உள்ளூராட்சி தேர்தல்

## புளொட் - கூட்டமைப்பு சந்திப்பு

(வவுனியா)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், புளொட் அமைப்புகளும் இடையிலான சந்திப்பு ஒன்று நேற்றுக் காலை 9.00 மணிக்கு இடம்பெற்றுள்ளது.

வைரவப் புளியங்குளத்தில் உள்ள கூட்டமைப்பின் அலுவலகத்தில் இச்சந்திப்பு இடம்பெற்றது.

இச்சந்திப்பில், கூட்டமைப்பின் சார்பில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், விநோதநோதராசலிங்கம், சிவசக்தி ஆனந்தன் ஆகியோரும், புளொட் அமைப்பின் சார்பில் முன்னாள் நகரசபைத் தலைவர் ஜி.பி.லிங்கநாதன் மற்றும் மத்திய குழு உறுப்பினர் கந்தையா சிவநேசன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத (12ஆம் பக்கம் பார்க்க)

## தடுப்புக் காவலில் உள்ள புலிகளுக்கு விடுதலை நால்வர் அடங்கிய குழு பூசா முகாமுக்கு விஜயம்

(கொழும்பு)

இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் புலி உறுப்பினர்களை விடுதலை செய்வது தொடர்பாக ஆராய்வதற்கென நால்வர் அடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்துக்கான ஆணைக்குழுவின் சிபாரிசின் பேரில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அதற்கான உறுப்பினர்களை நியமித்துள்ளார். தடுப்புக் காவலில் இருக்கும் புலி சந்தேக நபர்கள் தொடர்பில் ஆராய்ந்து அவர்களை விடுதலை செய்வது தொடர்பான விடயங்களை அவர்கள் சிபாரிசு செய்யவுள்ளனர்.

அதற்கான முதற்கட்ட நடவடிக்கையாக இன்று அவர்கள் பூசா தடுப்பு முகாமிற்கு விஜயம் செய்யவுள்ளனர். அங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ள புலிகளின் உறுப்பினர்கள் மற்றும் சந் (11ஆம் பக்கம் பார்க்க)

## கிணற்றிலிருந்து ஆணின் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

நாவற்குழி 3ஆம் கட்டை பகுதியில் பாழடைந்த கிணறு ஒன்றிலிருந்து ஆண் ஒருவரின் சடலத்தை பொலிஸார் நேற்று மாலை மீட்டுள்ளனர்.

மேற்படி சடலம் அடையாளம் காணப்படாத நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் யாழ்.பொலிஸார் தெரிவித்தனர்.

# யாழ்.குடாநாட்டில் தமிழ் பொலிஸார் தமது கடமைகளைப் பொறுப்பேற்றனர்

(அச்சுவேலி)

நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் குடாநாட்டுப் பொலிஸ் நிலையங்களில் பொலிஸ் பயிற்சியை நிறைவு செய்துள்ள குடாநாட்டுத் தமிழ் இளைஞர் மற்றும் யுவதிகள் பணிக்காக அமர்த்தப்பட்டுள்ளனர்.

இவ்வாறு அச்சுவேலி மற்றும் வல்வெட்டித்துறை பொலிஸ நிலையங்களில் யாழ்ப்பாண இளைஞர், யுவதிகள் புதிதாக சேவையில் இணைக்கப்பட்டுள்ளனர்.

தமிழ் இளைஞர், யுவதிகள் இவ்வாறு பொலிஸ் நிலையங்களில் பணிக்காக அமர்த்தப்பட்டிருப்பதனால் பொலிஸ் நிலையத்திற்கு முறைப்பாடுகளைப் பதிவு செய்யச் செல்லும் பலரும் பெரும் ஆறுதல் அடைந்துள்ளதுடன், மொழிரீதியான உரையாடல் பிரச்சினைகளும் மிக வெகுவாகக் குறைந்துள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, தமக்குச் சொந்த மாவட்டத்திலேயே பணி கிடைத்திருப்பதனால் தாம மிகவும் மகிழ்சி அடைந்திருப்பதாகவும் புதிதாக யாழ்ப்பாணத தில் கடமையேற்றுள்ள பொலிஸார் தெரிவிக்கின்றனர். (03)

# செஞ்சிலுவைச் சங்க தெல்லி.கிளை திறப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்.கிளையின் தெல்லிப்பளைக் காரியாலயம் இன்று பிற்பகல் 2 மணிக்குத் திறந்து வைக்கப்படவுள்ளதாக இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்.கிளையினர் தெரிவித்தனர்.

இப்பகுதி மக்கள் தமது தேவைகளின் பொருட்டு தேவைப்படும் போது இக்காரியாலயத்துடன் தொடர்பு கொண்டு செஞ்சிலுவைச் சங்கத்தின் சேவையைப் பெற்றுக் கொள்ள முடியுமென செஞ்சிலுவைச் சங்க அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மேலும் தெல்லிப்பளை செஞ்சிலுவைச் சங்கத் தொண்டர்களுக்கான மூன்றுநாள் முதலுதவிப் பயிற்சி எதிர்வரும் 28 ஆம், 29 ஆம், 30ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளதாகவும் அவ் அதிகாரி தெரிவித்தார். (பா)

# நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

இன்பர் சிட்டியில் காண்டீபன் அரங்கில் கயல்விழி எழுதிய 'உப்புக்காற்றில் விளைந்த பூக்கள்' எனும் கவிதைத் தொகுதி வெளியீட்டு விழா நாளை இடம்பெறவுள்ளது. (62)


## பனை அபிவிருத்திச் சபை

**பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சு**

### பிரதேச இணைப்பாளர் பதவிக்கான வெற்றிடங்கள்

01. பனை அபிவிருத்திச் சபையின் பிரதேச இணைப்பாளர்கள் பதவிகளுக்கான வெற்றிடத்தை நிரப்புவதற்குத் தகுதி வாய்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

02. **கல்வித் தகைமைகளும் அனுபவமும்:**
அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பதவிக்குப் பொருத்தமான பட்டம் பெற்றவர்கள் அல்லது அதற்குச் சமமான தகைமை.
அத்துடன்
அரச நிறுவனமொன்றில் அல்லது வேறு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் 2 வருட கால பதவிக்குப் பொருத்தமான சேவை அனுபவம்.

03. **ஏனைய தகைமைகள்:**
கணனி அறிவு,
முகாமைத்துவத்தில் சிறந்த திறமை,
பனை சம்பந்தமான துறையில் அறிவு.

04. **வயதெல்லை**
45 வயதுக்கு மேற்படாதவராக இருக்க வேண்டும்.

05. **மாதாந்த சம்பளம்:**
JM1-1-2006-Rs. 20,490-10X325-18X475-Rs.32,290

06. **நியமனத்தின் தன்மை:**
நிரந்தரமானது

07. **தேர்வு முறை:**
விண்ணப்பதாரி சுயவிபரக்கோவை ஆய்வு, திறனாய்வு மற்றும் நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவுசெய்யப்படுவார்கள்.

08. **பொதுவான நிபந்தனைகள்:**
1. தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்பத்திரத்தை ஆவணங்களின் பிரதிகளுடன் "தலைவர், பனை அபிவிருத்திச் சபை, தேசிய வீடமைப்பு அதிகாரசபைக் கட்டடம், யாழ்ப்பாணம்" என்னும் முகவரிக்கு 02.02.2011 திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு அனுப்பிவைக்கவும்.
1I. அரச/பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் கூட்டுத்தாபனங்கள், அரச நிறுவனங்களில் தொழில் புரியும் விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை தேவையான ஆவணங்களின் பிரதிகளுடன் அந்நிறுவனங்களின் தலைவர்களுக்கூடாக அனுப்ப வேண்டும்.
1II. இப்பதவிக்கு நியமிக்கப்படுபவர் தனது மாதாந்தச் சம்பளத்தில் 8 சதவீதம் ஊழியர் சேமலாப நிதிக்கு பங்களிப்புச் செய்வதுடன், ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதிக்கு முறையே 12 சதவீதமும், 3 சதவீதமும் சபை பங்களிப்புச் செய்யும்.
1V. விண்ணப்பதாரிகள் இலங்கையின் எப்பிரதேசத்திலும் சேவையாற்றக் கூடியவராக இருக்க வேண்டும்.
V. மேற்குறிப்பிட்ட அனைத்து நிபந்தனைகளையும், தகைமைகளையும் உள்ளடக்காத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

**பசுபதி சீவரத்தினம்,**
**தலைவர்,**
**பனை அபிவிருத்திச் சபை.**

(C/404)


# விசேட வேலைத்திட்டம் மீளாய்வுக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

ஜெனிவாவிலிருந்து வரும் சர்வதேச செஞ்சிலுவை செம்பிறைச் சங்கத்தின் தலைவர் கொழும்பில் நடைபெறவுள்ள இலங்கை செஞ்சிலுவைச் சங்கக் கிளைகளது 180 நாள் செயற்றிட்டம் தொடர்பான கருத்தரங்கில் பங்குகொள்ளவுள்ளதாக இலங்கை செஞ்சிலுவைச் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

இவ் விஜயத்தின் போது கொழும்பில் இன்ரகொண்டினன்ரல் ஹோட்டலில் தங்கியிருக்கும் அவர் எதிர்வரும் 26 ஆம், 27ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள இக்கருத்தரங்கில் பங்குகொள்ள வுள்ளனர்.

இக்கருத்தரங்கில் இலங்கையில் உள்ள 25செஞ்சிலுவைச் சங்கப் பிரிவுகளினது தலைவர்களும், பிரதிநிதிகளும் தாங்கள் இக்காலப்பகுதியில் செய்துகொண்டிருக்கின்ற வேலைத்திட்டங்கள் குறித்து விளக்கவுள்ளனர். முக்கியமாக வருவாய் தரக்கூடிய செயற்றிட்டங்கள் மூலமாக மக்களுக்குச் சென்றடையக் கூடிய நன்மைகளை அவர் கேட்டறிவார்.

இது செஞ்சிலுவைச் சங்கம் மக்களுக்குச் செய்யும் சேவையில், மையில் கல்லாக அமையுமென செஞ்சிலுவைச் சங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இக்கருத்தரங்கில் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்.கிளைத் தலைவர் பேராசிரியர் வி.க.கணேசலிங்கம், நிர்வாக உத்தியோகத்தர் கு.பாலகிருஸ்ணன், செயற்றிட்ட உத்தியோகத்தர் எஸ்.குகபாலன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர் எனத் தெரிய வருகிறது. (பா)

# தைப்பூசத் திருவிழா


(அச்சுவேலி)

குடாநாட்டின் பிரசித்தி பெற்ற முருகன் ஆலயங்களில் ஒன்றான அச்சுவேலி, நாவலம்பதி அருள்மிகு காட்டுமலைக் கந்தசுவாமி கோயில் தைப்பூசத் திருமஞ்சத் திருவிழா எதிர்வரும் வியாழக்கிழமை விசேட பூஜை வழிபாடுகளுடன் நடைபெறவுள்ளது.

காலை 10 மணிக்கு விசேட கும்பப்பூசை வழிபாடுகளை தொடர்ந்து மூலமூர்த்திக்கான அபிசேகம் இடம்பெற்று, மதியம் 12 மணிக்கு வசந்த மண்டபப்பூசையைத் தொடர்ந்து பெருமான் உள்வீதி வலம் வரும் திருக்காட்சி இடம்பெறும். இதைத் தொடர்ந்து அடியார்களுக்கு அன்னதானம் வழங்கும் நிகழ்வும் இடம்பெறும்.

அதையடுத்து பிற்பகல் 6 மணிக்கு மாலை வேளைப் பூசைகள் ஆரம்பமாகி 6.30 மணியளவில் வசந்தமண்டபத்திலிருந்து வள்ளி, தெய்வானை சமேதராய் எழுந்தருளும் முருகப் பெருமான் வர்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட சிற்பத் திருமஞ்சத்தில் தவில், நாதஸ்வர இசை முழங்க வெளிவீதியுலா வரும் திருக்காட்சியும் இடம் பெறவுள்ளது. (03)

# யாழ்.கச்சேரியடியில் துணிகரத் திருட்டு



(யாழ்ப்பாணம்)

யாழ்.கச்சேரி நல்லூர் வீதியில் நள்ளிரவு வேளையில் வீட்டின் சமையலறைக் கூரையைப் பிரித்து உள்ளிறங்கிய ஐந்துபேர் கொண்ட கொள்ளையர் கும்பல்கள் அங்கு ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தவர்களை கத்திகள், பொல்லுகளால் அச்சுறுத்தி அங்கிருந்து அறுபத்தைந்து பவுண் தங்க நகைகள் உட்பட இலத்திரனியல் சாதனங்களையும், புடவைகள், பணம் என்பனவற்றையும் கொளளையிட்டுச் சென்றுள்ளனர்.

நேற்று அதிகாலை 1.30 மணியளவில் கச்சேரியி-நல்லூர் வீதியில் இலக்கம் 98 இல் அமைந்துள்ள வேலுப்பிள்ளை வேதநாயகம் என்பவரது வீட்டிலேயே இத்துணிகரக் கொள்ளை இடம்பெற்றுள்ளது.

குறித்த வீட்டில் வேலுப்பிள்ளை வேதநாயகம் (வயது-70) என்பவரும் அவரது மனைவி மற்றும் அவரது பெண்பிள்ளை ஆகியோர் வீட்டில் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த வேளை திருடர்கள் வீட்டின் வெளிப்புமாகத் தண்ணீர்த் தொட்டியின் மீது சாத்தப்பட்டிருந்த ஏணியின் மீது ஏறி சமயலறை ஓட்டினைப் பிரித்து சமயலறையின் ஊடாக ஐந்து திருடர்களும் வீட்டிற்குள் புகுந்துள்ளனர். இவர்கள் வீட்டில் இருந்தவர்களை கத்தி, பொல்லுகளைக் காட்டிப் பயமுறுத்தியதுடன் அணிந்திருந்த தோடு உட்பட நகைகள்ளக் கழற்றுமாறு வற்புறுத்தினர். அவற்றை பலாத்காரமாகக் கழற்றிப் பறித்தெடுத்ததுடன் நோயாளியான வீட்டின் உரிமையாளர் கையில் அணிந்திருந்த மோதிரத்தையும் கழற்ற மறுக்கவே அவரது நெற்றி யில் பொல்லால் அடித்துவிட்டு அதனையும் கழற்றி யெடுத்ததுடன் வீட்டில் உள்ள அலுமாரிகள் உட்பட அனைத்துப் பகுதியையும் சல்லடைபோட்டுத் தேடி அங்கு வைக்கப்பட்டிருந்த தாலிக்கொடி உட்பட 65 பவுண் நகைகளையும், கமெரா, செல்போன் உட்பட பெருமளவு இலத்திரனியல் சாதனங்களையும், பாவிக்கப்படாத உடு புடவைகள், 3000 ரூபா பணம் முதலியவற்றைக் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர். இவ் ஐந்து திருடர்களில் ஒருவர் வயதானவர் என்றும் அனைவரும் முகத்தை மூடித் துணியால் கட்டியிருந்தார்கள் எனவும், குறித்த சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர்.

திருடர்கள் அங்கிருந்து தப்பிச் சென்றதும் அயலில் காவற் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸாருக்குத் தகவல் கொடுக்கப்பட்டதையடுத்து பொலிஸார் உடனடியாக குறித்த வீட்டுக்கு விரைந்து விசாரணைகளை மேற்கொண்டனர்.

மேலும் இச்சம்பவம் குறித்து பொலிஸார் விரிவான விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (பா)

# "தேடும் சிட்டுக்கள்" சஞ்சிகை வெளியீடு

(யாழ்ப்பாணம்)

சுகவாழ்வு நிலையத்தினால் தேடும் சிட்டுக்கள் (சிறுவர் கையேடு) எனும் சஞ்சிகை வெளியீட்டு நிகழ்வு இன்று புதன்கிழமை காலை 9.30 மணிக்குத் திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது கலையகத்தில் நிலையகத்தின் இயக்குநர் மி.செபமாலை பெரேரா அடிகளார் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்விற்கு, பிரதம விருந்தினராக கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் வெ.பாலசுப்பிரமணியமும், சிறப்பு விருந்தினராக கோப்பாய் பிரதேச செயலக சிறுவர் உரிமை மேம்பாட்டு அலுவலர் திருமதி வரதீஸ்வரி சத்தியேஸ்வரனும், கௌரவ விருந்தினராக யுனிசெவ் சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் திருமதி சர்மிலி சதீசும், கரித்தாஸ்-கியுடெக் நிறுவனத்தின் சிறுவர் நிகழ்ச்சித் திட்ட முகாமையாளர் அ.அஜந்தனும் கலந்துகொள்வர். (52)

பழங்கள் நிறைந்திருக்கும் மரம் எப்போதும் கனத்தினால் தாழ்ந்து வளைந்திருக்கும். அதுபோல் தாமும் பெருமை அடைய வேண்டுமானால், எல்லாரிடமும் அடக்கத்தோடும் பணிவோடும் இருக்க வேண்டும்.

-இராமகிருஸ்ணர்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
Thinamurasu@live.com
Thinamurasupaper@hotmail.com

## தேர்தலை நோக்கிய பாதையில் பயணம்

உள்ளூராட்சி சபைகளின் வேட்புமனுக்கள் முன்னர் அறிவித்திருந்தபடி நாளை மறுதினம் 21 ஆம் திகதி முதல் 27 ஆம் திகதிவரை எற்றுக்கொள்ளப்படும் என்று மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் அறிவித்துள்ளார்.

நாட்டின் சில பகுதிகளில் நிலவிவந்த சீரற்ற காலநிலை காரணமாக இடம்பெயர்வுகளுக்கு உள்ளான மக்களில் குறிப்பாக கிழக்கு மக்களின் அவல நிலையைக் கருத்திற்கொண்டு வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளும் திகதியைப் பிற்போடுமாறு பல தரப்பினரும் தேர்தல்கள் ஆணையாளரிடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இத்தரப்பினருக்கு பதிலளிக்கும் வகையிலேயே மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் மேற்படி அறிவிப்பை விடுத்துள்ளார்.

இந்நிலையில் அனைத்து அரசியல் கட்சிகளும் தத்தம் வேட்பாளர்களை தேர்தலில் நிறுத்துவது தொடர்பான தெரிவில் தீவிர அக்கறை காட்டியுள்ளனர்.

தென்னிலங்கை அரசியல் கட்சிகளைப் பொறுத்த வரையில் சில கட்சிகள் வேட்பாளர்கள் தெரிவுக்கான விண்ணப்பங்களைக் கோரி நேர்முகத் தேர்வின் மூலம் தகுதியானவர்களைத் தெரிவுசெய்து விட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

தமிழ் அரசியல் கட்சிகள் இன்னமும் ஒரு முடிவான தீர்மானத்துக்கு வரமுடியாது குழம்பிப் போயுள்ள நிலையில் காணப்படுகின்றன.

தமிழ் கட்சிகளின் அரங்கத்தில் பட்டும் படாமலும் இணைந்து கொண்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் தனித்துப் போட்டியிடுவதா? அல்லது அரங்கக் கட்சிகளுடன் இணைந்து போட்டியிடுவதா என்று தீர்மானிக்க முடியாது தத்தளிப்பதாக செய்திகளிலிருந்து அறிய முடிகிறது.

தமிழ் கட்சிகளின் அரங்கத்தில் உள்ள புளொட், தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ் தேசிய விடுதலைக் கூட்டமைப்பு மற்றும் ரெலோ உள்ளிட்ட கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்து தமிழ் தேசியக் கூட்டமைப்பு போட்டியிடுவது கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலருக்கு உடன்பாடு இல்லை எனவும் தெரியவந்துள்ளது.

கடந்த நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் ஒரு ஆசனத்தைக்கூட பெறமுடியாது ஒரு சில வாக்குகளைப் பெற்ற இக்கட்சிகளுடன் எப்படிக் கூட்டுச் சேர்வது என்பதிலேயே கூட்டமைப்புக்குள் இழுபறி நிலை ஏற்பட்டுள்ளது.

மாரிகாலத்தில் முளைவிடும் காளானைப்போல், தேர்தல் காலங்களில் மக்கள் முன் தோன்றி மக்களின் சுகதுக்கங்களில் இரண்டறக் கலந்துள்ள மக்கள் சேவையாளர்கள் மீது சில 'உமைக்குழல்கள்' மூலம் சேற்றை வாரியிறைக்கும் பச்சோந்திகளை மக்கள் இனங்கண்டு அவர்களைத் தூக்கி எறிய வேண்டும்.

'பழிப்பும்', 'நெழிப்பும்' படலைக்குள் என்பதுபோல் வன்னியிலிருந்து அவலங்களைச் சுமந்த மக்களுக்கு பண உதவியும் சுயதொழில் வாய்ப்பு உதவிகளும் செய்தவர்களை தேர்தல் காலத்தில் பரிகசித்தவர்கள் இன்று அதே உதவிகளை தாம் வழங்க மக்களைத் தம் பணிமனைக்கு அழைத்தும், கொண்டு திரிந்து கொடுத்தும் வருகின்றார்கள்.

இவையெல்லாம் உள்ளூராட்சி சபைத் தேர்தலை மையமாக வைத்து செய்யப்படும் செயற்பாடுகள் என்பதை மக்கள் அறிந்துகொள்ளும் காலம் வெகு தூரத்தில் இல்லை.

- ஆசிரியர் -

# வெள்ளத்தால் பாதிப்புற்ற அரச ஊழியருக்கு விசேட விடுமுறை உறுதிப்படுத்த வேண்டும்

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட அரசாங்க ஊழியர்களுக்கு விசேட விடுமுறை வழங்கப்படுவதுடன் ஒரு மாத சம்பளத்தை வட்டியில்லாக் கடனாக வழங்குமாறு அரசாங்கத்திடம் அகில இலங்கை தொழிற்சங்க சம்மேளனம் கோரிக்கை விடுத்தது.

வடக்கு, வடமத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு விசேட விடுமுறை வழங்கப்படும் என அரசாங்கம் அறிவித்துள்ள போதிலும் அது ஒரு சுற்றுநிருபமாக வெளியிடப்படவில்லை என அகில இலங்கை தொழிற்சங்க சம்மேளனத்தின் பொதுச்செயலாளர் சமந்த கோரள ஆராய்ச்சி தெரிவித்தார்.

'விடுமுறை வழங்குவது மாத்திரம் போதுமானதல்ல. அவர்களின் வாழ்க்கையை மீளக்கட்டியெழுப்புவதற்கான உதவிகள் வழங்கப்பட வேண்டும். அரசாங்க ஊழியர்கள் இதற்கு முன்னர் இவ்வாறான பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளனர்.

ஊழியர்களின் விடுமுறையை அங்கீகரிப்பதற்கு முன்னர் தமது வீடு பாதிக்கப்பட்டிருப்பதை நிரூபிக்குமாறு வலியுறுத்தப்படுகின்றனர்.

அதனால்தான் நாம் ஒரு சுற்றுநிரூபத்தின் மூலம் விடுமுறையை உறுதிப்படுத்துமாறு கோருகிறோம் என அவர் தெரிவித்தார்.

## நூற்றைம்பது டெங்கு நோயாளிகள் இம் மாதத்தில் மட்டும் இனம் காணல்

(கொழும்பு)

நாட்டில் மீண்டும் டெங்கு நோயின் அறிகுறிகள் ஏற்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதன்படி இந்த மாதத்தின் இரண்டுவார காலப் பகுதியில் டெங்குநோயின் தாக்கம் காரணமாக இருவர் உயிரிழந்தவுடன், மேலும் 150 பேர் இந்த நோய்த் தொற்றுக் காரணமாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

எனினும் கடந்த வருடத்தின் ஜனவரி மாதத்துடன் ஒப்பிடுகையில் இவ்வருட ஜனவரி மாதத்தில் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது

கடந்த வருடம் ஜனவரி மாதம் மட்டும் 4768 பேர் டெங்குத் தொற்றுக்கு இலக்காகியதுடன், கடந்த வருடத்தில் 34,768 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் சுகாதார அமைச்சு மேலும் தெரிவித்தது.

## தொற்றுநோய் பரவலைத் தடுப்பதற்கு மருத்துவக் குழுக்கள் அனுப்பிவைப்பு

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்திலுள்ள மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெயர்ந்தவர்களிடையே நோய்கள் பரவும் சாத்தியம் உள்ளதால் 10 விசேட மருத்துவக் குழுக்களைப் பணியில் ஈடுபடுத்த சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது. முதலாவது தொகுதியில் 21 மருத்துவர்கள் கடந்த சனிக்கிழமை மட்டக்களப்பு மாவட்டத்திற்குச் சென்றுள்ளனர்.

மற்றும் 5 குழுக்களும் செல்லவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.அம்பாறை, திருகோணமலை, மட்டக்களப்பு, பொலனறுவையிலுள்ள பெரிய மருத்துவமனைகளிலிருந்து விசேட மருத்துவக்குழுக்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன..

எவ்வாறாயினும் குளிர்காய்ச்சல், மஞ்சள் காமாலை, ஏ.எச்1 மற்றும் மலேரியா போன்ற தொற்றுநோய்கள் நலன்புரி முகாம்களில் ஏற்பட்டிருப்பதாக இதுவரை அறிவிக்கப்படவில்லை.

இடம்பெயர்ந்துள்ளவர்களுக்கு தேவையான வசதிகளை வழங்குமாறு சுகாதார அமைச்சு விடுத்த வேண்டுகோளுக்கு திருப்திகரமான பெறுபேறுகள் கிடைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# கேரதீவு - சங்குப்பிட்டி பாலமூடான பேருந்து சேவை நேற்று முதல் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் திறந்து வைக்கப்பட்ட கேரதீவு- சங்குப்பிட்டிப்பாலம் திறந்து வைக்கப்பட்ட அன்றைய தினமே இலங்கைப் போக்குவரத்துச் சபை பேருந்துவண்டி ஒன்றை வெள்ளோட்டம் பார்த்ததாகப் போக்குவரத்துச் சபையின் பிரதான முகாமையாளர் எஸ். கணேசபிள்ளை தெரி வித்தார்.

கடந்த 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஜனாதிபதியால் கேரதீவு - சங்குப்பிட்டிப்பாலம் திறந்து வைக்கப்பட்டது. இப் பாதையூடாக நேற்று முதல் போககுவரத்துச் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், அச்சேவை தொடர்பான நேர அட்டவணை விபரங்களையும் அவர் வெளியிட்டுள்ளார்.

அவ்விபரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

யாழ்ப்பாணத்தில் இருந்து பூநகரி நல்லூர் வரையான பேருந்துச் சேவை 18 ஆம் திகதி முதல் யாழ். பேருந்து நிலையத்தில் இருந்து தினமும் காலை ஏழு, இரண்டு மணிக்குப் புறப்பட்டு யாழ்ப்பாணம், சாவகச்சேரி, தனங்கிளப்பு ஊடாக பூநகரி - நல்லூர் வரை செயலாற்றப்படும் என்பதுடன் பூநகரி - நல்லூரில் இருந்து இதே பாதை வழியாக தினமும் 9.00 - 4.30 மணிக்குச் செயலாற்றப்படும் என்பதையும்-

தினமும் காலை 6.30 மணிக்கு யாழ்.பேருந்து நிலையத்தில் இருந்து கிளிநொச்சிச் சாலைப் பேருந்து ஒன்று நாவற்குழி, தனங்கிளப்பு, பூநகரி பாதை வழியாக ஸ்கந்தபுரத்துக்குச் செயலாற்றப்படும் என்பதுடன், ஸ்கந்தபுரத்திலிருந்து இதே பாதை வழியாக 1.45 மணிக்கு புறப்பட்டு யாழ்.பேருந்து நிலையம் வந்தடையும். எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஜேர்மன் அரசும் நிதியுதவி

(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கென ஜேர்மன் அரசாங்கம் 36,500 மில்லியன் ரூபா நிதியை வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிதியின் மூலம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு, குடிநீர் தேவைகளைப் பெற்றுக்கொடுக்க எண்ணியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஏற்கனவே ஜேர்மனியின் 2 தொண்டு நிறுவனங்கள் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணங்களை வழங்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன.

அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உடனடித் தேவைகளைப் பூர்த்தி செய்து அனர்த்தத்திலிருந்து மக்களை மீட்டு எடுக்க வேண்டும் எனவும் இந்த அனர்த்தத்திலிருந்து இலங்கை விரைவில் மீண்டெழும் எனவும் இலங்கைக்கான ஜேர்மன் தூதுவர் தெரிவித்தார்.

## தேவாரத்திரட்டு முற்றோதல்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைத் திருமுறை மன்றம் மாதாந்த பூரணைத் தினத்தில் நடாத்திவரும் "அகத்தியர் தேவாரத்திரட்டு முற்றோதல் பன்னிரு திருமுறைப் பாராயணம் இன்று புதன்கிழமை காலை 8.00 மணி முதல் மன்றத் தலைவர் பண்டிதர் வ.பேரின்பநாயகம் தலைமையில் கோண்டாவில் மேற்கு அருள்மிகு ஸ்ரீபார்வதி அம்பாள் சமேத ஸ்ரீ அதிபதீஸ் வரர் கோயிலில் ஆலய தர்மகர்த்தா சபையினரின் அனுசரணையுடன் நடைபெறும்.

## 1 லட்சத்து 60,000 மாணவர்கள் பார்வைக் குறைபாட்டால் அவதி

(கொழும்பு)

2020 ஆண்டுக்குள் கண்களைப் பாதுகாப்போம் என்ற திட்டத்தின் கீழ் பாடசாலை மாணவர்களின் கண் பார்வை தொடர்பான குறைபாடுகளை நீக்குவதற்கான ஒழுங்குகளை சுகாதார அமைச்சு மேற்கொண்டுள்ளது.

இதன்படி நாட்டில் 1இலட்சத்து 60 ஆயிரம் பாடசாலை மாணவர்கள் பார்வைக் குறைபாட்டினால் பாதிக்கப்பட்டுள்ளனர். 4 இலட்சம் பாடசாலை மாணவர்களுக்கு கண்பரிசோதனையை மேற்கொள்ள வேண்டியுள்ளது என அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்

இந்தத் திட்டத்தின் கீழ் கொழும்பு மாவட்டத்தில் 15 ஆயிரம் பாடசாலை மாணவர்களுக்கு மூக்குக்கண்ணாடி வழங்கப்பட்டுள்ளது.

வைத்தியசாலைகளில் உள்ள கண்பரிசோதனை நிலையங்கள் பாடசாலை மாணவர்களின் கண் பார்வை தொடர்பாக 6 மாதத்திற்கு ஒரு தடவை எந்தவித கட்டணமும் அறவிடாமல் பாடசாலைகளுக்குச் சென்று கண்பரிசோதனையை மேற்கொள்ளவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# தமிழ்மொழியின் தனித்துவத்தைப்பேணுவதற்கு ஆங்கில மொழிக் கலப்பைக்கைவிடவேண்டும்

## நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின்



(யாழ். நிருபர்)

**தமிழர்களாகிய எம்மிடையே தூய தமிழ் பேசும் நிலை மாறிவிட்டது. நான்கு வார்த்தைகள் தமிழில் பேசும்போதுகூட ஓர் ஆங்கில வார்த்தை வந்து புகுந்துவிடுகிறது. தமிழ்மொழியின் தனித்துவத்தைப் பேணுவதற்கு நாம் தூய தமிழில் பேசவேண்டும். தமிழ்மொழியைப் பேணிவரும் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் போன்ற அமைப்புகள் இதனைக் கட்டிக்காப்பற்ற வேண்டும்.**

இவ்வாறு யாழ்ப்பாணம் காங்கேசன் துறை வீதியில் அமைந்துள்ள ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தின் கீழைத்தேயக் கல்விக் கல்லூரியில் நடைபெற்ற பொங்கல் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) குறிப்பிட்டார்.

பண்டிதர் ம.ந. கடம்பேசுவரன் தலைமையில் பண்டித மாணவர் கழகம் நடாத்திய இவ்விழாவில் பிரதம விருந்தினர் தொடர்ந்து பேசுகையில்,

நூற்றாண்டுகளுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்து இயங்கிவரும் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தின் தமிழ்ப் பணி போற்றுதற்குரியதாகும். யாழ்ப்பாண மண்ணில் பண்டிதர் பரம்பரை ஒன்றை உருவாக்கும் பணியை இச்சங்கம் நீண்ட காலமாக மேற்கொண்டு வருகிறது. இதன் செயற்பாடுகளுக்குத் தமிழ் மக்கள் அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

தமிழர் பண்பாட்டு மரபுகளைப் பேணிக் காக்கும் நிறுவனங்களைக் கட்டிக்காப்பது எல்லோரதும் கடமையாகும். இன்று எமது சமூகத்தவர்களிடையே ஆங்கிலம் கலந்து பேசினால்தான் மதிப்பு என்ற நிலை உருவாகியுள்ளது. இந்நிலையை மாற்றி நாம் அனைவரும் தூய தமிழில் பேசவேண்டும்.

தமிழைத் தமிழாகத் தூய்மையாகப் பேச, எழுத ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் போன்ற அமைப்புகள் எமது மக்களுக்கு வழிகாட்ட முன்வர வேண்டும். யாழ்ப்பாணத்தில் மரபு ரீதியாக பண்டிதர் பரம்பரை ஒன்றை இவ்வமைப்பு உருவாக்கி வருகிறது. தமிழ் மொழியையும் பண்பாட்டையும் பேணிவரும் இவ்வமைப்பின் தேவைகளை எமது அமைச்சர் ஊடாக நிறைவேற்றுவதற்கு ஏற்பாடுகளைச் செய்வோம் எனவும் குறிப்பிட்டார்.

மக்களின் கரங்களைப் பற்றி அவர்களுடைய வாக்குகளைப் பெற்று நாடாளுமன்றம் சென்ற நாங்கள் மக்கள் குறைகளைத் தீர்த்து வைப்பதே எமது கடமை எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

பண்டிதர் ம.ந. கடம்பேசுவரன் தனது தலைமையுரையில்: யாழ்ப்பாணத்தில் நீண்ட காலமாக பண்டிதர்களை உருவாக்கிவரும் எமது சங்கம் பண்டிதர் சச்சிதானந்தம் ஐயா போன்றவர்களால் வளர்க்கப்பட்டது என்றும், விரைவில் நூற்றாண்டு விழா நடத்தவுள்ளது என வும் கூறினார். கவிஞர் சோ. பத்மநாதன் உட்பட மற்றும் பலர் உரை நிகழ்த்தினர். பண்டித மாணவர் சங்கச் செயலாளர் செல்வி இ. சியாமினி நன்றி நவின்றார். (10)

## வகுப்புகள் ஆரம்பம்

(யாழ். நிருபர்)

கோண்டாவில் மேற்கு வேதபாராயண சனசமூக நிலையம் நடத்தும் முன்பள்ளி மாணவர்களுக்கான வகுப்புகள் தைப்பூச தினமான நாளை வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளதாக மேற்படி சனசமூக நிலையத் தலைவர் தெரிவித்துள்ளார். (10)

## இறுவெட்டைப் பெறவும்

(யாழ்ப்பாணம்)

தேசிய பொங்கல் விழாவில் வைத்து மடிக் கணனிகள் பெற்றுக் கொண்ட மாணவர்களில் ஒருவரின் கணனியின் இறுவெட்டு தவறவிடப்பட்டுள்ளது.

இதனை வடமாகாண மேலதிக கல்விப் பணிமனையில் வந்து உடன் பெற்றுக் கொள்ளும்படி வடமாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (பா)

## சொற்பொழிவாளர் கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பலாலி வீதி பரமேஸ்வரா சந்தி அருள்மிகு வீரகத்தி விநாயகப் பெருமான் ஆலயத்தில் தைப்பூசத்தையொட்டி மகோற்சவப் பெருவிழா கடந்த 06ஆம் திகதி வெள்ளிக்கிழமை முதல் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 17 தினங்கள் நடைபெற்று வருகின்றன. இன்று புதன்கிழமை தேர்த் திருவிழாவும், நாளை வியாழக்கிழமை தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளது.

இம்மகோற்சவ காலங்களில் 15 தினங்களும் தொடர் தெய்வீகப் பேருரைகளை வழங்கி வருகின்ற யாழ்ப்பாணம் ஸ்ரான்லிக் கல்லூரி ஆசிரியரும் சொற்பொழிவாளருமாகிய வர்ணனைக் கலாநிதி மதுரகவி காரை. எம்.பி. அருளானந்தன் தேவஸ்தான பரிபாலன சபையினரால் கௌரவிக்கப்படவுள்ளார். இந்நிகழ்வு நாளை வியாழக்கிழமை மாலை 6.00 மணிக்கு நடைபெறவுள்ளது. (60)

## மீசாலை சன்மார்க்க ஞானகோட்ட தைப்பூசத் திருவிழா நிகழ்வுகள்

(சாவகச்சேரி)

மீசாலை சமரச சுத்த சன்மார்க்க சத்திய ஞானகோட்டத்தின் தைப்பூசத்திருவிழா இன்று புதன்கிழமை காலை 8.30 மணிக்கு கோட்டத்தில் உலகப் பொதுக்கொடி ஏற்றிவைத்தலுடன் ஆரம்பமாகி தொடர்ந்து இரண்டு தினங்கள் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. இதில் இன்று வள்ளல் அடிமை க. கேதீஸ்வரனின் தியானம் பற்றிய விளக்க உரை இடம்பெறவுள்ளது.

நாளை வியாழக்கிழமை அதிகாலை 3.00 மணிக்கு திருப்பள்ளியெழுச்சியுடன் ஆரம்பமாகித் தொடர்ந்து இறைப்படைப்பின் இரகசியமும் நோக்கமும் மற்றும் “தியானம்” என்ற பொருள் பற்றி க. கேதீஸ்வரன் உரையாற்றவுள்ளார். தொடர்ந்து பண்ணிசைக் கச்சேரியும் இடம்பெறவுள்ளது. மாலை நிகழ்வுகளில் மலேசியா, இந்தியா, இலங்கை அன்பர் களால் நடத்தப்படும் “வள்ளலார் அருளிய கொள்கைகள்” என்ற தலைப்பிலான ஆய்வரங்கம் இடம்பெறவுள்ளதுடன் கட்டுரை, பொது அறிவுப் போட்டிகளில் பங்குபற்றிய முதல் மூன்று பேருக்கு நினைவுப் பரிசில்களும் ஏனையோருக்கு சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

21ஆம்திகதி வெள்ளிக்கிழமை இரவு 8.30 மணிக்கு நடைபெறவுள்ள நிகழ்வுகளில் “மனித வாழ்வை வளம்படுத்துவதற்குப் பெரிதும் வேண்டுவது மதங்களா? ஜீவகாருணியமா?” என்னும் விடயம் பற்றிப் பட்டிமன்றம் இடம்பெறவுள்ளது.

இதில் நடுவராக கவிஞர் ச. நாகேஸ்வரன் கலந்து கொள்வார்.

தொடர்ந்து யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி நடன விரிவுரையாளர் திருமதி சுபாதினி தயாபரனின் நெறியாள்கையில் சுபாலய மாணவிகளின் திருவருட்பா நாட்டியம் மற்றும் வள்ளலார் வரலாறு நாட்டிய நாடகமும் இடம்பெறவுள்ளன. தொடர்ந்து செல்வி சுப்பிரமணியம் தீபனாவின் “வானத்தின் மீது மயிலாட” எனும் நாட்டிய நாடகமும் மற்றும் கலைஞர்களின் பக்திப் பாடல்கள் சங்கீத இசைக்கச்சேரிகள் என்பன இடம்பெறவுள்ளன. (11)



வாழ்வக நிறுவன தின விழாவில் சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சிந்தக பண்டாரவின் சேவையைப் பாராட்டியும் வாழ்வகத்தின் நினைவாகவும் வாழ்வகத் தலைவர், உப தலைவர் இணைந்து அவருக்குக் கேடயம் வழங்குவதைக்காணலாம். (54)

## வெளியீட்டுத்துறை மேம்பாடு குறித்து ஆக்கவாளர்களால் கலந்துரையாடல்



(யாழ்ப்பாணம்)

வெளியீட்டுத்துறையை மேம்படுத்துதல் மற்றும் பதிப்புக் கலையை வளர்த்தெடுத்தல் தொடர்பான கலந்துரையாடலொன்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் பலாலி வீதியில் அமைந்திருக்கும் சிகரம் ஊடக இல்ல கேட்போர்கூடத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெற்ற இக்கலந்துரையாடலில் இலங்கையில் தமிழ்மொழி மூலமான வெளியீடுகள் மற்றும் பதிப்பு நடவடிக்கைகளின் அவசியம் பற்றியும் பதிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான பிரச்சினைகள், வழிவகைகளைப் பற்றியும் கலந்துரையாடப்பட்டது.

இக்கலந்துரையாடலை சிகரம் ஊடக இல்லத்தின் பணிப்பாளர் கோ. றுஷாங்கள் ஆரம்பித்து வைத்தார்.

தொடர்ந்து நடைபெற்ற கலந்துரையாடலில் பேராசிரியர் இரட்ணஜீவன் கூல், டாக்டர் நடேசன், எழுத்தாளர் தெணியான், லெ. முருகபூபதி, ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம், யோ. கர்ணன், கவிஞர்களான சோ. பத்மநாதன், சித்தாந்தன், கருணாகரன், தானா, விஷ்ணு, கலைமுகம் சஞ்சிகையின் ஆசிரியர் செல்மர் எமில், மறுபாதி வெளியீட்டகத்தினர் தவிர வெளியீட்டகத்தினர், விரிவுரையாளர் த. கலாமணி, ஆய்வாளர் நிலாந்தன், சி. ரமேஸ், பா. மகாலிங்கசிவம், டான் தொலைக்காட்சி நிறுவனத்தின் பணிப்பாளர் குகநாதன், இரங்கும் இல்ல அமைப்பின் இணைப்பாளர் சிறிபதி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

தமிழ்ப் பதிப்பு முயற்சிகளில் இலங்கைக்கு இருந்த பங்களிப்பின் முக்கியத்துவம், ஆறுமுக நாவலர், சி வை. தாமோதரம்பிள்ளை போன்றோர் முன்னெடுத்த பதிப்பாக்க முயற்சிகள் போருக்கு முன்னர் வரை ஓரளவு சிறப்பாக நடைபெற்று வந்தன. ஆனால், கடந்த 30 ஆண்டுகாலப் போர் பதிப்பு மற்றும் வெளியீட்டு நடவடிக்கைகளை முடக்கி விட்டது.

இப்போதிருக்கும் புதிய சூழலில் பதிப்பு மற்றும் வெளியீட்டு முயற்சிகளை திறம்படச் செய்வதற்கு புலம்பெயர் தமிழர்களும் இலங்கையில் இருக்கின்ற செயற்பாட்டாளர்களும் இணைந்து செயற்படலாம் என்று இக்கலந்துரையாடலில் பேசப்பட்டது.

இக்கலந்துரையாடலின்போது, விலங்குப் பண்ணை மற்றும் வண்ணாத்திகுளம் ஆகிய நாவல்களும் அறிமுகம் செய்யப்பட்டன.

## வீதியோர விளக்குகள் விசமிகளால் சேதம்

(யாழ். நிருபர்)

காரைநகர் பிரதான வீதியில் பல இடங்களிலும் மின் விளக்குகள் நீண்ட காலமாக இரவில் ஒளிராத நிலையில் காணப்படுகின்றன. இவை சில பழுதடைந்தும், இன்னும் சில மின் விளக்குகள் விஷமிகளால் சேதமாக்கப்பட்டுமுள்ளன.

இதனால், இரவு வேளைகளில் வீதியால் பயணிப்போர் மிகவும் அசௌகரியமடைவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பிரதான இடங்களில் உள்ள மின்கம்பங்களுக்குத் தேவையான மின் விளக்குகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு காரைநகர் அபிவிருத்திச் சபை முன் வந்துள்ளது.

இம்மின் விளக்குகள் ஒளிர்வதால் மின்சார சபைக்குச் செலுத்த வேண்டிய மாதாந்த மின் கட்டணங்கள் காரைநகர் பிரதேச சபையினரே செலுத்த வேண்டுமென காரைநகர் அபிவிருத்திச் சபைத் தலைவர் மகாவாணி. க. சோமசேகரம் தெரிவித்துள்ளார். (10)

# புதியதொரு அபிவிருத்திப் பாதையில் கிளிநொச்சி மாவட்டம் முன்செல்கிறது

## கட்டளைத் தளபதி நந்தன உடவத்த



(கிளிநொச்சி)

அரசாங்கத்தின் தொடர்ச்சியான மேற்பார்வை மற்றும் உதவித் திட்டங்களால் கிளிநொச்சி மாவட்டம் புதியதொரு அபிவிருத்திப் பாதையை நோக்கி முன்செல்வதாக, கிளிநொச்சி மாவட்டக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் நந்தன உடவத்த தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

கிளிநொச்சி மாவட்டத்தின் ஒவ்வொரு பிரிவுகளிலும் அபிவிருத்திப் பணிகள் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றன. சுகாதாரம், பொருளாதாரம், அடிக்கட்டுமான வசதிகள் மற்றும் கல்வித்துறை என்பன மிகவும் வேகமாக அபிவிருத்தி செய்யப்படுகின்றன.

அத்துடன் இத்துறை சார்ந்த அமைச்சர்கள், மாவட்டத்திற்கு விஜயம் செய்து அபிவிருத்தி திட்டங்களின் முன்னேற்றம் குறித்து பார்வையிட்டு, அதற்கான அறிவுரைகளை வழங்கி வருகின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் மீள்குடியேறிய மக்கள் இயல்பான வாழ்க்கையை மேற்கொண்டு வருகின்றனர். மேற்படி துறைகளின் அபிவிருத்தி முன்னேற்றத்தின் மூலம் அவர்களின் வாழ்க்கைத்தரம் மேலும் முன்னேற்றமடையுமென அவர் மேலும் தெரிவித்தார்.

# ஊரிமணல் கிடைக்காததால் வீதி திருத்தப் பணிகள் தாமதம்

காரைநகர், வாரிவளவு வீதியைத் திருத்துவதற்கு வீதி அபிவிருத்தி அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளது. இவ்வீதித் திருத்த வேலைகளுக்குத் தேவையான ஊரிமணல் கிடைக்காமையே திருத்த வேலைகள் தாமதமடையக் காரணம் என்று கூறப்படுகிறது.

காரைநகர் பிரதேசமட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் தலைமையில் உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் அண்மையில் நடைபெற்றபோது இவ்வீதிப் பிரச்சினை சுட்டிக் காட்டப்பட்டது. ஊரி மணலைப் பெறுவதற்குத் தேவையான நிதியை வழங்குவதாக நாடாளுமன்ற உறுப்பினர் அ.விநாயகமூர்த்தி தெரிவித்துள்ளார். (10)

# பண்டத்தரிப்பு பனை, தென்னைவள சங்கத்திற்கு அமெரிக்க கல்வியியலாளர் குழுவினர் விஜயம்

(நமது நிருபர்)

அமெரிக்க மிச்சிகன் ஸ்டேட் பல்கலைக்கழக கல்வியியலாளர் குழுவொன்று அண்மையில் பண்டத்தரிப்பு பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்திற்கு விஜயம் செய்து சங்கத்தின் பனை, வெல்ல உற்பத்தி நிலையத்தினைப் பார்வையிட்டுச் சென்றுள்ளது.

வடமாகாண பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச ஆய்வுக் குழு ஆலோசகரும், யாழ்.பல்கலைக்கழக விவசாய பீட சிரேஷ்ட விரிவுரையாளருமான பேராசிரியர் ஜி.மிகுந்தன் மேற்படி கல்வியியலாளர் குழுவின் விஜயத்திற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தனர்.

பனை வளத்தில் இருந்து உற்பத்தி செய்யக் கூடிய அத்தனை பொருட்கள் தொடர்பான விளக்கங்கள், அனைத்தும் பேராசிரியர் ஜி.மிகுந்தனும் சங்க நிர்வாகத்தினரும் அளித்திருந்தார்.

பனம் பொருள் உற்பத்திகள் தொடர்பான விளக்கங்களைக் கேட்டறிந்த கல்வியியலாளர் குழுவினர், பனை வள உற்பத்திப் பொருட்களின் மேம்பாட்டுக்காக யாழ்.பல்கலைக்கழகத்தின் மூலமாக பல்வேறு உதவிகளையும் தாம் வழங்கத் தயாராக இருப்பதாகத் தெரிவித்திருந்தார்.

சங்கத்திற்கு விஜயம் செய்திருந்த கல்வியியலாளர் குழுவினருடன் பேராசிரியர் ஜி.மிகுந்தன் சங்கத்தின் தலைவர் அ.பெனடிக்ற், பொது முகாமையாளர் கி.குணரத்தினம், சமாசப் பதில் முகாமையாளர் சி.சிவகுமார் மற்றும் சங்கப் பணியாளர்களும் கலந்துரையாடல் நடத்தினர்.

பனம் பாத்தியில் இருந்து கிழங்கு எடுப்பது எப்படி என்றும் அவர்களுக்கு சங்கத்தினால் நேரடியாகக் காண்பிக்கப்பட்டது. பனை வளத்தில் இருந்து உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் அடங்கிய பொதிகள் அவர்களுக்கு வழங்கப்பட்டதுடன, அவற்றை ருசிபார்த்தும் சென்றனர்.

# நெறியாளர் குழு தெரிவு

(மானிப்பாய்)

மானிப்பாய் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கப் பணியாளர் நலன்புரிக் கூட்டுறவுச் சங்கத்தின் புதிய நெறியாளர்குழு அண்மையில் தெரிவு செய்யப்பட்டது.

தலைவராக சோ.ஆனந்தராசா, உப தலைவராக திருமதி கி.தவம், செயலாளராக செ.பிறேமராஜன், உப செயலாளராக திருமதி து.கா.பயியோலா, பொருளாளராக செல்வி ரா.சாளினி, நிர்வாக சபை உறுப்பினர்களாக சி.கணேசலிங்கம், செ.கனகலிங்கம், மா.குசலன், இ.காந்தராசா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

★ ★ ★ ★

(மானிப்பாய்)

மானிப்பாய் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுச்சபைக் கூட்டத்தில் பின்வருவோர் புதிய நெறியாளர் குழு உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர் கி.உமாசுதன், உபதலைவர் சி.அன்னலிங்கம், செயலாளர் த.சிவலிங்கம் மற்றும் உறுப்பினர்களாக பொ.தங்கராசா, க.மகிந்தன், அ.குணசீலன், இ.சந்திரகுமார், சி.றேமன்ஜில்பேட் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

# டைனமற் வெடி பயன்படுத்திய மீனவர்களுக்கு பிணை வழங்கல்

(மன்னார்)

மன்னார் பள்ளிமுனைக் கடற்பரப்பில் டைனமற் வெடி மூலம் மீன் பிடித்திருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் 9 மீனவர்கள் கைது செய்யப்பட்டதுடன், மீன்கள் சில மன்னார் மாவட்ட நீதிபதியிடம் ஒப்படைக்கப்பட்டது.

மன்னார் பள்ளிமுனைக் கடற்பரப்பில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை சுமார் 4ஆயிரம் கிலோகிராம் நிறையுடைய மீன்களைப் பிடித்துக்கொண்டு கரைக்கு வந்த மீனவர்களிடம் கடற்படையினர் சோதனையிட்டபோது குறித்த மீன்கள் தடைசெய்யப்பட்ட டைனமட் வெடி மூலம் பிடித்திருப்பது தெரியவந்துள்ளதுடன், சந்தேகத்தின் பேரில் மீனவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைதான 9 மீனவர்களும் மன்னார் மாவட்ட நீதிபதி ஏ.யூட்சன் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டபோது விசாரணை நடத்திய நீதிபதி ஒவ்வொரு மீனவர்களும் தலா 25ஆயிரம் ரூபா பிணையில் செல்வதற்கு உத்தரவிட்டார்.

மன்னார் மாவட்ட நீதிபதியிடம் குறித்த மீனவர்கள் டைனமட் வெடிபொருட்களை பயன்படுத்தி மீன் பிடித்ததை ஒப்புக் கொண்டுள்ளனர்.

குறித்த வழக்கு விசாரணை இம்மாதம் 31ஆம் திகதி இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மரக்கறி வகைகளின் விலைகள் மன்னாரில் திடீரென அதிகரிப்பு

(மன்னார்)

மன்னாரில் மரக்கறி வகைகளின் விலை திடீரென அதிகரித்திருப்பதால் நுகர்வோரும் வியாபாரிகளும் இக் கட்டான நிலைக்குள் தள்ளப்பட்டிருக்கின்றனர்.

கடந்த சில நாட்களாக நாட்டின் பல பாகங்களிலும் தொடர்ச்சியாக ஏற்பட்டிருக்கின்ற சீரற்ற காலநிலை காரணமாக பல்வேறுபட்ட அழிவுகள் இடம்பெற்றிருக்கின்றது. இந்நிலையில் நாட்டின் பல பாகங்களிலும் உள்ள விவசாயச் செய்கை, சிறிய பயிர்ச் செய்கை மற்றும் தோட்டச் செய்கைகளும் அழிவடைந்திருக்கின்றது. இதனால் நாட்டின் ஏனைய பகுதிகளில் இருந்து மன்னாருக்கான மரக்கறிகளை எடுத்து வருவதில் வியாபாரிகள் பாரிய சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் தற்போது மன்னாரில் மரக்கறி வகைகளுக்கான விலைகள் திடீரென அதிகரித்திருப்பதாகவும் நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

உருளைக்கிழங்கு மட்டுமே கிலோ ஒன்று 55 ரூபா தொடக்கம் 70 ரூபா வரையான சாதாரண விலையில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

இது தொடர்பில் மன்னார் மரக்கறி சந்தையில் வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டுவரும் வர்த்தகர் ஒருவர் தெரிவிக்கையில்-

தம்புள்ள மற்றும் வவுனியா பகுதிகளில் உள்ள சந்தைகளில் இருந்தே மன்னாருக்கான மரக்கறி வகைகளை எடுத்துவர வேண்டியிருப்பதனால், அங்கு ஏற்பட்டிருக்கும் விலை அதிகரிப்பு, மழை காரணமாக மரக்கறி வகைகளுக்கு ஏற்பட்டிருக்கும் சேதங்கள் மற்றும் போக்குவரத்து உள்ளடங்கலாக ஏற்றி இறக்கும் நடவடிக்கைகளுக்கான கூலி அதிகரிப்பே மன்னாரின் மரக்கறி விலைகளின் அதிகரிப்பிற்குக் காரணம் எனத் தெரிவித்தார்.



# மீள்குடியமராத காணிகளில் கொட்டப்படுகின்ற கழிவுகள்

(யாழ்.நிருபர்)

காரைநகர் மக்கள் மீளக் குடியமராத காணிகளில் கழிவுப் பொருட்கள் கொண்டு வந்து கொட்டப்படுவதாக இப்பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

வேதரடைப்பு கிராமத்தில் உள்ள வீடுகள், காணிகளில் இவ்வாறான கழிவுப் பொருட்கள் பெருமளவில் கொண்டு வந்து குவிக்கப்பட்டுள்ளன.

இவ்விடயம் தொடர்பாக காரைநகர் பிரதேச பொது சுகாதாரப் பரிசோதகரிடம் கேட்டபோது இக்கழிவுப் பொருட்களைத் தான் பார்வையிட்டதாகவும் குறிப்பிட்ட பிரதேசத்தின் கிராம சேவையாளர் பொதுவேலைத் திட்டத்தின் மூலம் அவற்றைத் துப்புரவு செய்ய முடியும் எனவும் குறிப்பிட்டார். (10)

## இன்றைய பலன்

(19.01.2011 புதன்கிழமை)

**பஞ்சாங்கக் குறிப்புகள்**

விகிர்தி தை 05

இராகுகாலம் 12.35- 02.05, சுபநேரம் 5.05 -6.35, பூரணை பி.இ 03.36 வரை, புனர் பூசம் பி.இ. 12.03 சித்தம், பூரணை விரதம். அரச, வங்கி, வர்த்தக விடுமுறை.

இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது

-ஆதினி-

| | | | |
|---|---|---|---|
| மேடம்:- வீண் அலைச்சல், நோய்த் தாக்கம், அதிக செலவு. | கடகம்:- தான தர்மம் செய்தல், ஆலய வழிபாடு, நண்பர் உதவி | துலாம் :- பதவி உயர்வு, தொழில் இலாபம், அயலவர் உதவி. | மகரம்:- முரண்படுதல், வீண் செலவு, தாய் வழியால் துன்பம். |
| ரிஷபம்:- பிறரை நேசித்தல், மன மகிழ்ச்சி, பொருள் வரவு. | சிம்மம்:- பொருள் வரவு, நற்செய்தி கிடைத்தல், மகிழ்ச்சிப் பெருக்கு. | விருச்சிகம் :-பாராட்டப்படல், முயற்சி பலிதம், தொழில் பிரயாணம். | கும்பம் :- ஏமாற்றப்படல், மனக் குழப்பம், நண்பர் விரோதம். |
| மிதுனம் :- போட்டிகளில் வெற்றி, மேலோர் பாராட்டு, உற்சாக மிகுதி. | கன்னி :- நினைத்த காரியச் சித்தி, உபதேசம் செய்தல், பணவரவு. | தனுசு:- மகிழ்ச்சிப் பெருக்கு, காரிய சித்தி, கடன் வசூல் | மீனம்:- வாகன விபத்து, மருத்துவச் செலவு, முரண்படுதல். |

# ஐ.தே.கட்சி தலைமைத்துவப்பதவி ஏப்ரலுக்கு முன்னர் கிடைத்துவிடுமாம்

## நம்பிக்கை தெரிவிக்கிறார் சஜித்



(கொழும்பு)

எதிர்வரும் ஏப்ரல் மாதத்துக்கு முன் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவம் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் பதவி என்பன தன் வசம் வந்துவிடுமென ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாச உறுதியான நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

அம்பாந்தோட்டையின் திஸ்ஸ மஹாராமையில் நடைபெற்ற வைபவமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு நம்பிக்கை தெரிவித்தார். திஸ்ஸமஹாராமையின் உள்ளூராட்சித் தேர்தல்களுக்கான அபேட்சகர்களை அறிமுகப்படுத்தும் நோக்கில் குறித்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அங்கு தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அவர், எதிர்க்கட்சித் தலைவர் பதவி என்பது தனது பதவியை மட்டும் காப்பாற்றிக் கொண்டு பிரச்சினைகளை விட்டுத் தூர விலகியோடும் ஒருவரிடம் இருக்கக் கூடாது. அதே போலவே கட்சியினதும், கட்சி உறுப்பினர்களினதும் பிரச்சினைகளைத் தீர்க்கும் ஆற்றல் கொண்ட ஒருவரிடம் தான் கட்சித் தலைமைத்துவம் இருக்க வேண்டும்.

அந்த வகையில் எதிர்வரும் சிங்கள - தமிழ்ப் புத்தாண்டுக்கு முன்பதாக எதிர்க்கட்சித் தலைவர் பதவி மட்டுமன்றி ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராகவும் நான் உங்களுடன் இணைந்து புத்தாண்டைக் கொண்டாடுவேன் என்பதை உறுதியாக உங்களுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இனிவரும் தேர்தல்கள் அனைத்துக்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராகவும், எதிர்க்கட்சித் தலைவராகவும் தான் நான்முகம் கொடுப்பேன். அவற்றின் மூலமாக கட்சியை வெற்றிப் பாதையில் வழி நடாத்திச் செல்வேன்.

தற்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அம்பாந்தோட்டையிலிருந்து உருவானதைப் போலவே ஐக்கிய தேசியக் கடசியின் அடுத்த ஜனாதிபதியும் அம்பாந்தோட்டையிலிருந்துதான் உருவாகப் போகின்றார்.அது நான் தான். என்று அவர் கூறினார்.

# வெள்ள அனர்த்தம் காரணமாக மரக்கறிகளின் விலை உயரலாம்

(கொழும்பு)

வெள்ளத்தினால் வடக்கிலும் கிழக்கிலும் விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளதனால் அரிசி மற்றும் மரக்கறி வகைகளில் விலை உயர்வு ஏற்படலாம் என அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

மேலும், தற்போது மரக்கறி வகைகளின் விலை அதிகமாக காணப்படுவதற்கு சீரற்ற கால நிலையே காரணம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மூன்று மாத காலத் தேவைக்கான அரிசி இருப்புக் காணப்படுவதால் அரிசியின் விலையில் தற்போதைக்கு எதுவித பாதிப்பும் ஏற்படாது எனவும், ஆனால் மரக்கறியின் விலையில் ஏற்கனவே அதிகரிப்பு நிகழ்ந்துள்ளதாகவும் அமைச்சர் மஹிந்த அமரவீர ஏ.எப்.பி.செய்திச் சேவைக்கு தெரிவித்துள்ளார்.



ஒரு வருடத்தின் முன்பு உள்ளூராட்சி தேர்தல் இடம்பெற்ற மார்ச் மாதம் பணவீக்கம் 3.4 சதவீதமாகக் காணப்பட்டதாகவும், கடந்த டிசம்பர் மாதம் வருடாந்த பணவீக்கம் 5.4 சதவீதமாக உயரந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

விலையினை கட்டுப்படுத்த கோழி முட்டை மற்றும் கோழி இறைச்சி போன்றவற்றை இறக்குமதி செய்தது போன்று மரக்கறி வகைகளையும் இறக்குமதி செய்வது என்பது நடைமுறைக்கு சாத்தியமற்ற விடயம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# வெள்ளத்தால் சேதமடைந்த வயல்களுக்கு நட்டஈடு வழங்குவதற்கு துரித நடவடிக்கை

(கொழும்பு)

வெள்ளத்தினால் சேதமடைந்த வயல் நிலங்களுக்கு அடுத்துவரும் 30 தினங்களுக்குள் நஷ்டஈடு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக விவசாய மற்றும் விவசாயக் காப்புறுதி சபை தெரிவித்துள்ளது. பாதிக்கப்பட்ட விவசாய நிலங்கள் குறித்து மதிப்பீடு செய்வதற்காக 5 குழுக்கள் கொழும்பில் இருந்து அனுப்பப்பட்டுள்ளதாக விவசாய மற்றும் விவசாயக் காப்புறுதி சபை பொது முகாமையாளர் பண்டுக வீரசிங்க தெரிவித்தார்.

வெள்ளம் காரணமாக 4 இலட்சம் ஏக்கர்களுக்கும் அதிகமான வயல் நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இதன்படி மட்டக்களப்பு, அனுராதபுரம், பொலன்னறுவை, அம்பாறை, திருகோணமலை ஆகிய பகுதிகளுக்கு விவசாய காப்புறுதிசபைக் குழுக்கள் சென்று சேத மதிப்பீடுகளை ஆரம்பித்துள்ளன.

வயல் நிலங்களுக்கு எத்தகைய சேதம் ஏற்பட்டுள்ளது? எவ்வளவு நஷ்டஈடு வழங்குவது என்பது குறித்து ஆராயப்பட்டு வருவதோடு உரிய தகவல்கள் திரட்டப்பட்டு உடன் துரிதமாக நஷ்டஈடுகள் வழங்க உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

விவசாய காப்புறுதி சபையில் காப்புறுதி செய்தவர்களுக்கே முதலில் நஷ்டஈடு வழங்கப்படும். காப்புறுதி செய்யாதவர்களுக்கு நஷ்டஈடு வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான கமநல மற்றும் வனவிலங்குகள் பாதுகாப்பு அமைச்சர் எஸ்.எம். சந்ரசேன மற்றும் இடர் முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த அமரவீர உரிய நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.


# 14 துப்பாக்கிகளுடன் பதினொரு பேர் கைது

(கொழும்பு)

மட்டக்களப்பு வாகரை பிரதேசத்தில் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது 14 துப்பாக்கிகளுடன் 11 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர்.

வாகரை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் வழிகாட்டலில் இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் வாழைச்சேனை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர். வாகரை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மதுபாவனை நோயாளிகளுக்கு கட்டணம் மருத்துவ அதிகாரிகள் சங்கம் எதிர்ப்பு



(கொழும்பு)

மதுபாவனையினால் நோய்களுக்கு ஆளான அல்லது விபத்துக்குள்ளானவர்களுக்கு கட்டணம் அறவிடுவதற்கு உத்தேசித்துள்ளமைக்கு தாம் எதிர்ப்புத் தெரிவிப்பதாக அகில இலங்கை மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்தது.

மது அருந்தியவர்களிடம் இவ்வாறான தருணங்களில் கட்டணம் அறவிடுவது தமது மருத்துவ தொழில்முறைக்கு முரணானது என அச்சங்கம் தெரிவித்துள்ளது.

இத்தகைய சட்டம் குறித்து அரசாங்கம் தொடர்ச்சியாக கூறிவருகின்ற போதிலும் வைத்தியசாலைகளுக் குச்சுற்று நிருபங்கள் எதுவும் விநியோகிக்கப்படவில்லை எனவும் அச்சங்கம் கூறியுள்ளது.

'நாம் சத்தியப் பிரமாணம் செய்யும்போது நோயாளிகளின் இரகசியத்தை பாதுகாப்பதற்கு நாம் உறுதிபூண்டுள்ளோம். அது இத்தகைய சட்டங்களின் கீழ் சாத்தியமில்லாமல் போகலாம்' என அகில இலங்கை மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் டாக்டர் ஜயலத் பண்டார கூறினார்.

'நாம் அனைத்து நோயாளிகளுக்கும் கட்டணம் அறவிட்டால் அது வேறு கதை. ஆனால்,நாம் சுகாதார சேவைகளை இலவசமாக வழங்கும் நிலையில் மது அருந்துபவர்களிடம் கட்டணம் அறவிடுவது பாகுபாடானதாக அமையும்.

மது பாவனையைக் குறைப்பதற்காக அரசாங்கம் இதைச் செய்கின்றதென நாம் நம்பவில்லை. கடந்த சில வருடங்களில் மதுபான தயாரிப்பு மற்றும் விற்பனை அனுமதிப் பத்திரமுள்ள மதுபானச் சாலைகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதை தரவுகள் காட்டுகின்றன என டாக்டர் ஜயலத் பண்டார கூறினார். அதேவேளை 'தாம் கட்டணம் செலுத்த நேரிடும் என்பதால் நோயாளிகள் தமது மருத்துவ வரலாறு மற்றும் நாளாந்த பழக்க வழக்கங்கள் குறித்து உண்மை பேசாமல் போகலாம். இதுவும் எமக்குப் பிரச்சினையாகும். எனவும் அவர் கூறினார்.

# வயல்களில் கட்டடம் அமைக்க அரசாங்கம் விதித்தது தடை

(கொழும்பு)

விவசாய நிலங்களில், குறிப்பாக நெல் வயல்களில் கட்டடங்களை நிர்மாணம் செய்வதற்கு அரசாங்கம் தடை விதித்துள்ளது. நெல் வயல்களை வேறு பல தேவைகளுக்காகப் பயன்படுத்துவோருக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என அரசாங்கத் தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

நெல் வயல்களை பயன்படுத்துதல் குறித்து நாட்டில் காணப்படும் சட்டத்தில் திருத்தம் கொண்டுவரப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. நெல் வயல்களை வேறு பல தேவைகளுக்குப் பயன்படுத்துவோருக்கு எதிராக 100,000 ரூபா அபராதமோ அல்லது ஆறு மாத கால சிறைத் தண்டனையோ விதிக்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சில வேளைகளில் இந்த இரண்டு தண்டனைகளும் விதிக்கப்படக் கூடுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. நெல் வயல்களில் கட்டடங்களை அமைத்த 470 பேருக்கு எதிராக தற்போது நடைமுறையில் உள்ள சட்டத்தின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

# கஞ்சா விற்பனையில் ஈடுபட்ட பொலிஸ் உத்தியோகத்தர் கைது

(கொழும்பு)

கஞ்சா போதைப் பொருளை நீண்ட காலமாக விற்பனை செய்து வந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

பொலிஸ் விசேட அதிரடிப் படையின் உபபொலிஸ் பரிசோதகராக கடமையாற்றிய நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டவராவார்.

கண்டி மஹியங்கனை பொக்பிட்டிய வீதியில் வைத்து குறித்த நபரை பொலிஸார் கைது செய்தனர்.

குறித்த நபரிடம் கஞ்சாவை கொள்வனவு செய்யுமாறு நபர் ஒருவரை அனுப்பி அதன் மூலம் சந்தேக நபரை பொலிஸார் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தர்ப்பத்தில் குறித்த நபரிடம் 500 கிராம் கஞ்சா போதைப் பொருள் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்ட நபர் கந்தளாய் பிரதேச பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றி வருபவர் என்பது குறிப்பிடத்தக்கது.

தனமல்வில பிரதேசத்திலிருந்து கஞ்சாப் போதைப் பொருள் கடத்தப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# உணவுவகைகளை உற்பத்தி செய்வதற்காக புகையிலைச் செய்கைக்கு தடைவிதிப்பு


(கொழும்பு)

எதிர்காலத்தில் நாட்டில் புகையிலைச் செய்கைக்கு தடை விதிக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக விவசாயத்துறை அமைச்சர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார்.

உணவு வகைகளை உற்பத்தி செய்வதில் விவசாயிகளின் கவனத்தைத் திருப்புவதன் நோக்கமாகவே இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே புகையிலைச் செய்கையில் ஈடுபடுபவர்களுக்கு வழங்கப்படும் உரமானியத்தையும் நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அவர் குறிப்பிட்டார்.

புகையிலைச் செய்கையை நிறுத்திவிட்டு விவசாயப் பயிர்ச் செய்கைகளில் கவனம் செலுத்துமாறு விவசாயத்துறை அமைச்சர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன விவசாயிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.




1996ஆம் ஆண்டு இலங்கை அணி வென்ற உலகக் கிண்ணம் அணிவகுப்புடன் எடுத்து வரப்படுவதையும், உலகக் கிண்ணம், மாதிரிப் பந்து காட்சிக்கு வைக்கப்பட்டதையும், மாதிரிப் பந்தில் மாணவியொருவர் தனது கை அடையாளத்தைப் பதிப்பதையும் காணலாம். (பா)

# யாழ். எடுத்துவரப்பட்ட பந்தினை பெருமளவானோர் பார்வையிட்டனர்

(யாழ்ப்பாணம்)

2011ஆம் ஆண்டு உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியினைப் பிரபல்யப் படுத்தும் வகையிலும், உலகக் கிண்ணப் போட்டிகளில் பங்குகொள்ளும் இலங்கை அணியினரை ஆசீர்வதிக்கும் வகையிலும் நேற்றுக் காலை யாழ். நகரிற்கு 1996ஆம் ஆண்டு இலங்கை அணியினால் கைப்பற்றப்பட்ட உலகக் கிண்ணம் மற்றும் மாதிரிப் பந்து ஊர்வலமாக எடுத்து வரப்பட்டு யாழ். மத்திய பேருந்து நிலையத்தில் மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டது.

யாழ். மணிக்கூட்டு வீதியில் இருந்து ஆரம்பமாகிய இந்த உலகக் கிண்ண ஊர்வலத்தில் 1996ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தை ரணதுங்க தலைமையிலான இலங்கையணி கைப்பற்றிய போது, அவ்வணியில் இடம்பெற்றிருந்த புஸ்ப குமாரவினால் இந்த உலகக் கிண்ணம் ஊர்வலமாக எடுத்து வரப் பட்டது.

மாணவர்களின் பாண்ட் வாத்திய இசை அணிவகுப்புடன் யாழ். வைத்திய சாலை வீதி வழியாக ஊர்வலமாக வந்தமைந்து, யாழ். மத்திய பேருந்து நிலையத்தை அடைந்தது.

அங்கு பிரத்தியேகமாக அமைக்கப் பட்டிருந்த மேடையில் இந்த உலகக் கிண்ணமும், மாதிரிப் பந்தும் மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து இம்முறை உலகக் கிண்ணப் போட்டிகளில் விளையாடும் இலங்கை அணியினர் சிறப்பாக விளையாடி கிண்ணத்தைக் கைப்பற்றும் முகமாக இலங்கை அணிக்கு ஆசீர் வாதம் வழங்கும் நிகழ்வும் நடைபெற்றது.

இம்மேடையில் வைக்கப்பட்டிருந்த பிரமாண்ட மாதிரிப் பந்தின் மீது சாயம் பூசி ஆசீர்வதிக்கும் நிகழ்வு படைகளின் யாழ். நகரக் கட்டளைத் தளபதி அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

தொடர்ந்து படை அதிகாரிகள், யாழ். நகர பொலிஸ் அதிகாரி, கல்விப் பணிப்பாளர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், பாடசாலை மாணவ, மாணவிகள், விளையாட்டு பயிற்றுவிப்பாளர்க விளையாட்டு வீரர்கள், நடுவர்கள், பொதுமக்கள் எனப் பெருமளவான மக்கள் இந் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வினை, இலங்கை கிரிக்கெட் சங்கத்துடன் இணைந்து வட மாகாண கிரிக்கெட் பயிற்றுவிப்பாளர் ரவிந்திர புஸ்ப குமார, யாழ். மாவட்ட பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம், யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கம் ஆகியன இணைந்து ஒழுங்கு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (பா)

# ஸ்கந்தவரோதயாவிற்கு எதிரான போட்டி சென் ஜோன்ஸ் அபார வெற்றி பெற்றது

(யாழ்ப்பாணம்)

ஸ்கந்தவரரோதயாக் கல்லூரிக்கு எதிரான கிரிக்கெட் போட்டியில் யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரி அணி இனிங்ஸ் மற்றும் எட்டு ஓட்டங்களால் அபார வெற்றி பெற்றது. இலங்கை பாடசாலை கிரிக்கெட் சங்கத்தால் நடாத்தப்பட்டு வரும் 19 வயதுப் பிரிவு குழு இரண்டு அணிகளுக்கிடையிலான இரண்டு நாட்களைக் கொண்ட இனிங்ஸ் போட்டியிலேயே சென் ஜோன்ஸ் கல்லூரி அணி மேற்படி வெற்றியைப் பெற்றுள்ளது.

சென் ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினம் இப்போட்டி ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அணி முதலில் துடுப்பாடத் தீர்மானித்தது. இதற்கமைய முதல் இனிங்சிற்காக களமிறங்கிய ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அணி அனைத்து விக்கெட்டுக் களையும் இழந்து 42 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சஞ்சஜன் 16 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் ஹரிவதனன் மூன்று, ஹரிகரன், டக்சன் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.


பதிலுக்கு முதல் இனிங்சிற்காக களமிறங்கிய சென் ஜோன்ஸ் கல்லூரி அணி, அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 97 ஓட்டங்களைப் பெற்றது. இதில் மதுசன் 25, ரஜீந்திரன் 15, டக்சன் 13 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் குமுதன் ஐந்து, ஜிவிசன் மூன்று, புருசோத்தமன் இரண்டு விக்கெட்டுக் களைக் கைப்பற்றினர்.

இந்நிலையில், 50 ஓட்டங்கள் பின்னிலையில் இரண்டாவது இனிங்சை ஆரம்பித்த ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அணி, ஆறு விக்கெட்டுக்களை இழந்து 39 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் முதல் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தது.

இதனைத் தொடர்ந்து நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டத்தைத் தொடர்ந்த ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அணி நான்கு ஓவர்கள் நிறைவுக்கு வந்த வேளை, அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 42 ஓட்டங்களைப் பெற்று, இனிங்ஸ் மற்றும் எட்டு ஓட்டங்களால் தோல்வியடைந்தது. துடுப்பாட்டத்தில் எந்தவீரரும் நிலைத்து நின்று ஆடவில்லை. பந்து வீச்சில் விதுசன், ஹரிவதணன் ஆகியோர் தலா மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். (எஸ்)




## 2ஆவது சுற்றுக்கு முன்னேற்றம்



(மெல்பேர்ன்)

அவுஸ்ரேலிய ஓபன் ரென்னிஸ் போட்டியில் வீனஸ் வில்லியம்ஸ், ரபெல் நடால் ஆகியோர் முதல் சுற்றில் வெற்றிபெற்று இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

இதில் ரபேல் நடால் 6-0, 5-0 என்ற நிலையில் இருந்த போது மார்கோஸ் காயத்தால் வெளியேறினார். எனவே ரபேல் நடால் வெற்றி பெற்று 2-வது சுற்றுக்கு முன்னேறினார். மற்றொரு போட்டியில் ரஷ்ய வீரர் மைக்கேல் யோசுனி, துருக்கி வீரர் மார்சலை 6-2, 6-3, 7-6, (7-5) என்ற செட்டில் வீழ்த்தி இரண்டாவது சுற்றுக்கு முன்னேறினார்.

இதேவேளை, இந்தியாவின் சர்னியா மிஸ்சா முதல் சுற்றில் தோல்வியடைந்ததுடன் தொடரிலிருந்து வெளியேறினார்.

# டோனி தலைமையிலான இந்திய அணி உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றுமாம்

(சென்னை)



1983ஆம் ஆண்டு கபில்தேவ் தலைமையிலான இந்திய அணி உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றியது. அதைப்போல டோனி தலைமையிலான இந்திய அணி இந்த முறை உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றும் என இந்தியாவின் தெரிவுக் குழுத் தலைவர் சிறிகாந் தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது, உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிக்காக மிகச்சிறந்த வீரர்களைக் கொண்ட அணியை அறிவித்துள்ளோம். துடுப்பாட்ட வரிசையில் வலுவாக இருக்கும் வகையிலும், சுழற்பந்து வீச்சில் சிறப்பாக இருக்கும் அளவுக்கும் வீரர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இந்தியா உலகக் கிண்ணத்தை வென்று 28 ஆண்டுகள் ஆகிவிட்டன. இப்போது நமது நாட்டில் நடைபெறும் இந்த உலகக் கிண்ணத்தை வென்று நமது எதிர்பார்ப்பை வீரர்கள் நிறைவேற்றுவார்கள். அனைத்து விடயங்களையும் ஆராய்ந்து அதற்கு ஏற்றவகையில் அணியைத் தேர்வு செய்துள்ளோம் என்றார்.

# பாகிஸ்தான் வெற்றி இலக்கு 274

(வெலிங்டன்)




நியூசிலாந்து அணிக்கெதிரான வெலிங்டன் டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் அணியின் வெற்றி இலக்கு 274 ஓட்டங்களாகவுள்ளது. நியூசிலாந்து, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவதும், இறுதியுமான போட்டி கடந்த 15ஆம் திகதி வெலிங்டன் மைதானத்தில் ஆரம்பமானது.

இதில் விக்கெட் இழப்பின்றி ஒன்பது ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் நேற்றைய நான்காம் நாள் ஆட்டத்தை நியூசிலாந்து அணி தொடர்ந்து. குப்ரில், மக்குலம் ஆகியோர் சிறப்பாக ஆடி நியூசிலாந்து அணியின் ஓட்ட எண்ணிக்கையை கௌரவமான நிலைக்கு எட்டுச் சென்றனர். இந்நிலையில் நேற்றைய நான்காம் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளை, நியூசிலாந்து அணி அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 293 ஓட்டங்களைப் பெற்றது. இதில் குப்ரில் 73, மக்குலம் 64, ரெய்லர் 52, சௌத்தி 22 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் உமர் குல் நான்கு, அப்துல் ரஹ்மான் மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

ஏற்கனவே, 20 ஓட்டங்கள் முன்னிலையில் பாகிஸ்தான் இருப்பதால், இன்று ஒரு நாள் உள்ள நிலையில், வெற்றிபெற 274 ஓட்டங்களைப் பெறவேண்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. நியூசிலாந்து முதல் இனிங்சில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 356 ஓட்டங்களைப் பெற்றது. பாகிஸ்தான் முதல் இனிங்சில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 376 ஓட்டங்களைப் பெற்றது.

## அணிகள் அறிவிப்பு



(சிட்னி)


அடுத்த மாதம் நடைபெறவுள்ள உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டித் தொடருக்கான 15 பேர் கொண்ட அணியை அவுஸ்ரேலிய மற்றும் சிம்பாப்வே ஆகிய கிரிக்கெட் சபைகள் அறிவித்துள்ளது. இதன்படி அவுஸ்ரேலிய அணித் தலைவராக ரிக்கி பொண்டிங் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன் வேகப்பந்து வீச்சாளர் பிரெட்லீயும் அணியில் இடம்பிடித்துள்ளார்.

அவுஸ்ரேலிய அணி விபரம் வருமாறு: ரிக்கி பொண்டிங் ( அணித் தலைவர்), மைக்கல் கிளார்க் (உப தலைவர்), போலிஞ்ஜர், ஹடின் (விக்கெட் காப்பாளர்), ஹஸ்ரிங்ஸ், ஹயூரிஸ், டேவிட் ஹசி, மைக் ஹசி, ஜோன்ஸன், பிரெட்லீ, பெய்ன் (விக்கெட் காப்பாளர்), ஸ்மித், ரைற் வட்சன், வைற்.

சிம்பாப்வே அணி விபரம் வருமாறு: எல்டன் சிக் (அணித் தலைவர்), றெஜிஸ் சகப்வா, சார்ள்ஸ் கொன்வென்றி, கிரேம் கிரீமர், கிரேக் எர்வின், சீன் எர்வின், கிரேக் லம்ப், மசகட்சா, கிறிஸ் மொபு, றேபிறைஸ், றெயின்ஸ் போட், தைபு (விக்கெட் காப்பாளர்), ரெய்லர், உட்சயா, வில்லியம்ஸ்.

# எமது அரசியலுரிமைப் பிரச்சினையை அடுத்த சந்ததிக்கு சுமத்திவிடத்தயாரில்லை

## யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெற்ற சூரியப் பொங்கல் நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆற்றிய உரை



சூரியப்பொங்கல் காண எழுச்சியுற்று வந்திருக்கும் எம் இனிய உறவுகள் அனைவருக்கும் வணக்கம்!

இன்றைய தினம் ஒரு வீரிய தினம்!

இது உலகத்திற்கு உணவு படைக்கும் உழைக்கின்ற மக்களான உழவர்கள் கொண்டாடி மகிழும் திருநாள் மட்டுமல்ல...

சூரியனுக்கு நன்றி தெரிவித்து, சூரிய வணக்கம் செலுத்தும் சூரியப்பொங்கல் தினம் மட்டுமல்ல.

இது ஒரு தேசியப்பொங்கலாகவும் இருக்க வேண்டும் என்று கருதியே எமது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களின் நேசக்கரத்தைப் பற்றிப் பிடித்து உங்களிடம் அவரை அழைத்து வந்திருக்கின்றேன்.

உங்களுக்குச் சேவை செய்யும் கரங்களைக் கொண்டவர்களே இந்த அரங்கத்தில் இருக்கின்றார்கள்...

கௌரவ ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்கள்... ஜனாதிபதி அவர்களின் செயலாளர் நண்பர் லலித் வீரதுங்க அவர்கள்... அமைச்சர்... வட மாகாண ஆளுநர் திரு சந்திரசிறி அவர்கள்...

எமது நாடாளுமன்ற உறுப்பினர்களான அசோக் சந்திரகுமார் அவர்கள்,உதயன் சில்வேஸ்திரி அலன்றின் அவர்கள் யாழ்.மாவட்ட அரசஅதிபர் இமெல்டா சுகுமார் அவர்கள்... யாழ் மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராஜா அவர்கள்...

யுத்தப் படைகளாக இல்லாமல் மக்கள் பாதுகாப்புப் படையாக மாறி மக்களின் விருப்பங்களுக்கு ஒத்திசைவாக செயலாற்ற விரும்பும் படைத்தளபதிகள், மற்றும் கட்டளைத் தளபதிகள்...

எல்லோருமே இந்த அரங்கத்தில் மக்கள் முன் வீற்றிருக்கின்றார்கள்...

இன்றைய சூரியப்பொங்கல் விழா வெறும் களியாட்ட நிகழ்வு அல்ல...

சேவைகள் ஆற்றிக்கொண்டிருப் பவர்களும் சேவைகளை மேலும் பெறவேண்டிய எமது மக்களும் சந்தித்துக் கொள்ளும் நிகழ்வுதான் இந்த சூரியப்பொங்கல் தினம்.

உரிமைகளை வழங்க விருப்பங்கொண்டவர்களும், உரிமைகளைப் பெறவேண்டிய எமது மக்களும் சங்கமித்துக் கொள்ளும் நிகழ்வுதான் இந்தத் தேசியப் பொங்கல் தினம்

நாம் களியாட்டங்களை நடத்துவதற்கு இந்த நிகழ்வை ஒழுங்கு செய்திருக்கவில்லை. களியாட்டம் நடத்தும் சூழலும் இதுவல்ல.

எமது கிழக்கு வாழ் உறவுகள் இயற்கை அனர்த்தங்களால் அவலப்பட்டுக் கொண்டிருக்கும் இந்தத் துயரச்சூழலில் நாம் களியாட்டங்களை நடத்திக்கொண்டிருக்க முடியாது.

எமது தேசத்தில் வாழும் தனியொரு மனிதனுக்கு, வலிகள், வதைகள், அவலங்கள் நிகழுமேயானால் அந்த வலியும், வதையும், அவலமும் எமது இதயங்களிலும் வலியெடுக்கும் உணர்வுகளைக் கொண்டவர்கள் நாங்கள்.

1978இல் எமது கிழக்கு மாகாண மக்கள் இயற்கை அனர்த்தங்களால் அவலப்பட்டு துயரங்களைச் சுமந்து நின்றபோது நிவாரணப்பொருட்களை சேகரித்து கிழக்கு மக்களிடம் நேரடியாக முதலில் கொண்டு சென்று அந்த மக்களின் துயரங்களைத் துடைத்தவர்களில் நானும் ஒருவன்.

தற்போதும் கிழக்கு மக்களின் அவலங்களைக் கண்டு எமது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அவர்கள் துரிதமான நிவாரணப்பணிகள் உரிய முறையில் நடக்க வேண்டும் என்று பணிப்புரை வழங்கியுள்ளார்.

நாமும் எமது கிழக்கு வாழ் உறவுகளின் அவலம் கண்டு துடி துடித்து அந்த மக்களுக்கான நிவாரணப்பணிகளில் ஈடுபட்டு வருகின்றோம். யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பொது அமைப்புகளும் ஈடு பட்டு வருகின்றன.

கிழக்கு மக்களின் துயர் துடைக்க உதவியுள்ள அனைவருக்கும் இந்த இடத்தில் நான் நன்றி தெரிவிக்கின்றேன்.

ஒரு புறம் இயற்கையின் அனர்த்தங்கள் நடந்து கொண்டிருப்பினும் மறு புறத்தில் ஏற்கனவே பல்வேறு அவலங்களையும் சந்தித்திருந்த உங்களுக்காகவே இன்றைய சூரியப்பொங்கல் நிகழ்வுகள் நடந்து கொண்டிருக்கின்றது.

இதில் கபட நோக்கம் இல்லை. சுயநலம் இல்லை. அரசியல் இல்லை.

சூரியனுக்கு நன்றி தெரிவிக்கும் இன்றைய தினத்தில் அச்சமும் பதற்றமும் தருவனவாக இருந்த சூழலையும்,

எமது மக்கள் உரிமையின் பெயரால் நடத்தப்பட்ட அழிவுயுத்தத்தினாலும் சொந்த இனத்தவர்களாலும் சுரண்டப்பட்டும், ஒடுக்கப்பட்டும், கொல்லப்பட்டும், அச்சுறுத்தப்பட்டும் வாழ்ந்து வந்த துயரச்சூழலை இல்லாதொழித்து, எமது மக்களுக்கு ஆறுதல் தரமுடிந்த அமைதிச் சூழலை உருவாக்கித் தந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அவர்களுக்கும் மற்றும் சகலருக்கும் நன்றி தெரிவிக்கும் நிகழ்வாகவே இதை நாம் கருதவேண்டும்.

நீண்ட கால இழப்புகளை சந்தித்திருந்த எமது மக்கள் அழிவுகளை மட்டுமன்றி வேறு எதையுமே பெற்றுத்தந்திராத அழிவு யுத்தத்தை முடிவிற்கு கொண்டுவந்த நடவடிக்கையின் போதும் அழிவுகளில் இருந்து மீண்டெழுந்து வந்திருக்கின்றார்கள்.

துயரங்கள் இனியில்லை, அவலங்கள் இங்கில்லை.. என்ற நிலைமையை தோற்றுவித்தமைக்காக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் நிகழ்வாகவே இதை நாம் கருதுகின்றோம்.

பெரும் புயலை எதிர் கொண்டு மீண்டெழுந்து வந்த எமது மக்கள் துயரங்களில் இருந்து விடுபட்டு ஒளிமயமான ஒரு எதிர்காலத்தை நோக்கிச் செல்லும் விருப்பங்களை வெளிப்படுத்தும் தினமாகவே இன்றைய சூரியப்பொங்கல் தினத்தை நாம் கருதுகின்றோம்.

இதுவரை அனுபவித்து வந்த வலிகள், வதைகள் அனைத்தையும் எடுத்துக்காட்டி அவற்றிலிருந்து மீள்வதற்கான வாய்ப்புகளையும், சந்தர்ப்பங்களையும் கடந்த கால தமிழ் தலைமைகள் தவற விட்டது போல், இனியும் நாம் தவறவிட அனுமதிக்க மாட்டோம் என்ற நம்பிக்கையோடு,

கிடைத்த சந்தர்ப்பத்தை நாம் உரிய முறையில் பாதுகாப்போம் என்பதற்கு எமது மக்கள் சமிக்ஞை காட்டும் தினமாகவே இன்றைய தேசியப்பொங்கல் தினத்தை நாம் கருதுகின்றோம்.

சகல வன்முறைகளும் ஒழிக்கப்பட்ட, இன்னமும் முழுமையாக ஜனநாயக மயப்படுத்தப்பட்ட ஒரு சமாதான பூமியிலேயே நாம் வாழ விரும்புகின்றோம் என்ற எண்ணங்களை வெளிப்படுத்த உரிமையோடு உறவுக்கரம் நீட்டுகின்ற நிகழ்வாகவே இன்றைய சூரியப்பொங்கலை நான் கருதுகின்றேன்.

இனங்களுக்கிடையிலான ஐக்கியத்தைப் பலப்படுத்தவும், பேணிப்பாதுகாக்கவும், சம உரிமை பெற்ற சுதந்திர பிரஜைகளாக எமது மக்கள் முகமுயர்த்தி கௌரவமாக வாழ்வதற்கும், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அவர்களுடனான உறவுகளை எமது மக்களும் பலப்படுத்துகின்ற உயரிய எண்ணங்களைக் கொண்ட நிகழ்வாகவே இந்த தேசியப் பொங்கல் தினத்தை நான் கருதுகின்றேன்.

எம் இனிய மக்களே!...

எதை நாம் தீர்க்கதரிசனமாகவும் தொலை தூரப்பார்வையோடும் சொல்லியிருந்தோமோ அதுவே இங்கு நடந்து முடிந்திருக்கின்றது. அது துயரங்களோடு நடந்து முடிந்திருந்தாலும் நிரந்தர மகிழ்ச்சிக்காகவே நடந்து முடிந்திருக்கிறது.

எதை நாம் நடக்கும் என்று சொல்லியிருந்தோமோ அதுவே இங்கு நடந்து கொண்டும் இருக்கின்றது.

எதை நாம் எண்ணியிருந்தோமோ அதுவே இங்கு நடக்கவும் போகின்றது. எந்த வழிமுறையில் எமது அரசியலுரிமை பிரச்சினைக்கான தீர்வை பெற்றுக்கொள்வது சாத்தியம் என்று நாம் சொல்லி வந்திருக்கின்றோமோ அந்த வழிமுறையே அரசாங்கத்தினாலும், தென்னிலங்கை எதிர்க்கட்சிகளாலும், மற்றும் சர்வதேச சமூகத்தாலும் குறிப்பாக இந்திய அரசாலும் இன்று அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றது.

சமீபத்தில் இந்தியாவில் இருந்து இலங்கைக்கு வருகை தந்திருந்த அனைத்து அரசியல் பிரமுகர்களும் இராஜதந்திரிகளும் இதையே வெளிப்படையாக உறுதிப்படுத்தியும் இருக்கின்றார்கள்.

வெற்றியின் இலக்கை அடையும் தருணத்தில் இருக்கும் எமது நடை முறைச்சாத்தியமான வழிமுறையை எந்தளவிற்கு இன்னமும் அதிகமாக மக்கள் ஏற்று பின்பற்றுகின்றார்களோ அந்தளவிற்கு அதன் வெற்றி என்பது இலகுவாகவும் விரைவாகவும் நிறைவேறும்.

எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது. எது நடக்கின்றதோ அதுவும் நன்றாகவே நடக்கின்றது. எது நடக்க இருக்கின்றதோ அதுவும் நன்றாகவே நடக்கும்.

நாம் வெறும் சலசலப்பு காட்டுவதற்காகவோ அன்றி எமது மக்களின் அழிவுகளை வைத்து சுயலாப அரசியல் நடத்துவதற்காகவோ, . எந்தக்காலத்திலும் எதையும் சொல்லியிருந்ததும் இல்லை. செய்திருந்ததும் இல்லை.

அழிவு யுத்தம் என்பது எமது மக்களை நடுத்தெருவிற்கு கொண்டு வந்து நிறுத்தும் என்றும், அழிவு யுத்தத்தை நிறுத்தி அமைதிப்பேச்சின் ஊடாக நாம் அடைய வேண்டிய அனைத்தையும் பெற முடியும் என்றும் நாம் தீர்க்கதரிசனமான தீர்மானங்களை எடுத்திருந்தோம்.

இதே போல் அனைத்து தமிழ் தலைமைகளும் ஏற்கனவே முடிவுகள் எடுத்திருந்தால் எப்போதோ எமது மக்களும் நாங்களும் நினைத்தது இங்கு நடந்திருக்கும். எமது மக்கள் இத்தனை அவலங்களை சுமந்திருக்க வேண்டிய துயரங்களும் நிகழ்ந்திருக்காது.

ஆரம்ப காலங்களில் சாத்வீக முறையில் எமது அரசியலுரிமைகளுக்காக உழைப்போம் என்று தெரிவித்திருந்த தமிழ் தலைமைகள் எமது மக்களுக்கு வெறும் உணர்ச்சிகளை மட்டும் ஊட்டியிருந்தார்கள். வெறுமனே உணர்ச்சி வசப்பட்டவர்களாக எதிர்ப்பு அரசியலை மட்டுமே குறியாகக் கொண்டிருந்தார்கள்.

தவறானவற்றை தவறு என்று தெரிவிப்பதில் தவறில்லை. ஆனால் இணங்கிச் செல்ல வேண்டிய இடங்களில் அவர்கள் இணங்கிச்சென்று எமது மக்களுக்கான அரசியலுரிமைகளைப் பெற முயன்றிருக்கவில்லை.

வாக்குகளை எடுப்பதற்கும், தேர்தலில் வெல்வதற்கும் முக்கியத்துவம் செலுத்தியிருந்த அளவிற்கு தமிழ் மக்களின் அரசியலுரிமைப் பிரச்சினையை தீர்ப்பதற்கு அவர்கள் முக்கியத்துவம் செலுத்தியிருக்கவில்லை. கிடைத்த சந்தர்ப்பங்களை அவர்கள் சரிவரப்பயன்படுத்தியிருக்கவில்லை.

தனிச்சிங்கள சட்டம் கொண்டுவரப்பட்ட போது தமிழை மட்டும் படிப்போம் என்று சொன்னார்கள். பொன். கந்தையா அவர்கள் சொல்லியிருந்ததுபோல் இரு மொழியையும் இரு இன மக்களும் படிப்போம் என்ற கருத்தை பாரம்பரிய தமிழ் தலைமைகள் ஏற்றிருந்தால் மொழியுரிமைப் பிரச்சினை இங்கு எழுந்திருக்காது.

இந்த தவறான அணுகுமுறையால் எமது தமிழ் சமூகத்தினர் பல்வேறு நாடுகளுக்கும் புலம்பெயர்ந்து பல்வேறு மொழிகளையும் கற்க வேண்டிய நிலையே உருவாகியிருக்கின்றது. இதனால் தமிழ் மொழியை மறந்து போகும் நிலை கூட உருவாகியிருக்கின்றது.

அதேபோல் ஆரம்ப காலங்களில், அதாவது இலங்கை இந்திய ஒப்பந்தத்திற்கு முன்பிருந்த இலங்கைத் தீவின் ஆட்சியாளர்களும் அதே தவறுகளையே விட்டிருக்கின்றார்கள்.

அதனால் தீர்வு காணப்பட முடியாத எமது அரசியலுரிமைப் பிரச்சினைக்காக எமது மண்ணில் ஒரு ஆயுதப்போராட்டம் நடத்தப்பட்டது. அந்த ஆயுதப்போராட் டத்தின் ஆரம்பங்களில் ஒரு நீதியும் இருந்தது. அதில் நானும் ஒரு தலைமைப்பாத்திரம் ஏற்று உழைத்திருக்கின்றேன். எங்களில் பலரும் அதில் பங்கெடுத்திருக்கிறார்கள்.

ஆயுதப்போராட்டத்தில் எமக்குள் நாமே சண்டையிட்டுக்கொண்டதே அதிகம்.

தமிழர்களே தமிழர்களை கொன்றொழித்த வரலாறே இங்கு நடந்து முடிந்துள்ளது. அதற்கு காரணமான வர்கள் இன்று உயிருடன் இல்லை என்பதால் நான் அது குறித்து மேலும் விமர்சிக்க விரும்பவில்லை.

ஆனாலும் ஆயுதப்போராட்டத்தின் விளைவுகளால் நாம் விரும்பியது போல் அந்த அழுத்தங்களால் இலங்கை இந்திய ஒப்பந்தம் என்ற பொன்னான வாய்ப்பு எங்களுக்குக் கிடைத்திருந்தது.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தோடு ஆயுதப்போராட்டம் முடிவிற்கு கொண்டுவரப்பட்டிருக்க வேண்டும். அந்த ஒப்பந்தத்தை வாய்ப்புக் கிடைத்தவர்கள் ஏற்கவும் இல்லை. ஏற்றுக் கொண்ட வர்கள் சரிவரப்பயன்படுத்தவும் இல்லை.

இலங்கை இந்திய ஒப்பந்தத்தை நாம் சரிவர ஏற்று, பயன்படுத்தியும் இருந்தால்


அதன் பின்னரான அழிவுகள் இங்கு நடந்திருக்காது.

ஆகவேதான் நான் ஒரு விடயத்தை அடிக்கடி தெரிவித்து வருகின்றேன். இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் பின்னரான அழிவுகள் அனைத்திற்கும் பிரதான பொறுப்பை எடுக்க வேண்டியவர்கள் சம்பந்தப்பட்ட தவறான தமிழ் அரசியல் தலைமைகளே.

(தொடர்ச்சி 10 பக்கம் பார்க்க)

# காங்கிரஸ் ஆட்சி அமைக்கும் போதெல்லாம் அத்தியாவசிய பொருட்களின் விலை உயர்கிறது

## நிதிஷ்குமார் குற்றச்சாட்டு



(சென்னை)

மத்தியில் காங்கிரஸ் தலைமையிலான அரசு அமையும் போதெல்லாம், அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வது வாடிக்கையாகி விட்டது என, பீகார் முதல்வர் நிதிஷ்குமார் கூறியுள்ளார்.

பீகார் முதல்வர் நிதிஷ் குமார் செய்தியாளர்களிடம் பேசுகையில் -

தேசிய அனல் மின் கழகம் மற்றும் மாநில அரசு இணைநது நபி நகரில் புதிய அனல்மின் நிலையத்தை அமைக்கவுள்ளது. இதற்காக சம்பந்தப்பட்ட கிராமத்திலிருந்து நிலம் கையகப்படுத்தப் பட்டது. இதற்கான உரிய இழப்பீட்டுத் தொகை பாரபட்சமின்றி உரியவர்களுக்கு வழஙகப்படும்.

பீகாரைப் பொறுத்தவரை, பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய இழப்பீட்டுத் தொகைகளைா் பெறுத் தருவதில் முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது. இருப்பினும், சில விஷமிகள் விரும்பத் தகாத செயல்களில் ஈடுபட்டு வருவது துரதிஷ்டவசமானது. கடந்த சில தினங்களுக்கு முன் அங்கோரா ரயில் நிலையத்தில், ஐந்து ரயில் பெட்டிகள் எரிக்கபபட்டன. இது போன்ற நடவடிக்கைகளில் எவரும் ஈடுபட வேணடாம். இதனால் அனல்மின் நிலையப் பணிகள் பாதிக்கப்படும். சட்டத்தை எவரும் கையில் எடுத்துக் கொள்வதை அனுமதிக்க முடியாது.

அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வுக்கு காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசே முழுப்பொறுப்பு ஏற்க வேணடும். விலை உயர்வுக்கு மாநில அரசுகளைக் குறை கூறுவதை காங்கிரஸ் வழக்கமாகக் கொண்டிருக்கிறது. பதுக்கல்காரர்கள் மீது பாரபட்சமின்றி கடும் நடவடிக்கை எடுக்கப்படும். மத்தியில் காங்கிரஸ் தலைமையிலான அரசு அமையும்போதெல்லாம், அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வது வாடிக்கையாகிவிட்டது என்றார்.




# பெற்றோல் விலை உயர்வை எதிர்த்து சந்திரபாபு நாயுடு சைக்கிள் யாத்திரை

(ஹைதராபாத்)

பெட்றோல் விலை உயர்வைக் கண்டித்து சந்திரபாபுநாயுடு வரும் 22 ஆம் திகதி சைக்கிள் யாத்திரையை மேற்கொள்ளவுள்ளார்.

கனமழையால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உரிய நிவாரணம் வழங்கக் கோரி அண்மையில் தெலுங்குதேச கட்சித் தலைவர் சந்திரபாபு நாயுடு உண்ணாவிரதம் மேற்கொண்டார். அவருடைய உண்ணாவிரதம் தோல்வியில் முடிந்தது. இதையடுத்து அவர் மாட்டுவண்டிச் சவாரி மேற்கொண்டார்.

இந்நிலையில் பெட்றோல் விலை உயர்வைக் கண்டித்து சந்திரபாபு நாயுடு 22 ஆம் திகதி சைக்கிள் யாத்திரை நடத்தவுள்ளார். அத்துடன், பெட்றோல் விலை உயர்வைக் கண்டித்துப் பல்வேறு தொடர் போரர்ட்டங்களையும் அவர் நடத்தத் திட்டமிட்டுள்ளார்.

இதன்படி 22 ஆம் திகதி அவர் ஹைதராபாத்தில் சைக்கிள் யாத்திரை செல்கிறார். இந்த யாத்திரை தெலுங்குதேசக் கட்சி அலுவலகத்திலிருந்து புறப்பட்டு இந்திரா சுற்றுலாமையத்தைச் சென்றடையும்.

# சுதந்திரதினத்தை முன்னிட்டு தமிழகத்தில் தீவிர பாதுகாப்பு

குடியரசு தினத்தையொட்டி தமிழகம் முழுவதும் 70 ஆயிரம் பொலிஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபடவுள்ளனரென தமிழக பொலிஸ் அதிகாரி லத்திகா சரண் தெரிவித்தார்.

இதுதொடர்பாக லத்திகா சரண் மேலும் கூறியதாவது -

தமிழ்நாட்டில் பாதுகாப்பிற்காக விரைந்து செயற்படும் குழு ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. குடியரசு தின விழாவையொட்டி பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து இக்குழு ஆய்வு செய்து வருகிறது.

இந்த ஆய்வுக்குப் பின்னர் ரயில் நிலையம், பேருந்து நிலையம், வழிபாட்டுத் தலங்கள், விமான நிலையங்கள், வணிக வளாகங்கள் உட்படப் பல்வேறு இடங்களில் பொலிஸ் பாதுகாப்பு போடப்படும்.

சென்னை விமான நிலையத்தைப் பொறுத்தவரை கூடுதல் பொலிஸ் பாதுகாப்பு போடபபட உள்ளது. தமிழ்நாடு முழுவதும் குடியரசு தினத்தை யொட்டி 70 ஆயிரம் பொலிஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபடவுள்ளதுடன், கண்காணிப்பு நடவடிக்கைகளும் தீவிரமாக் கப்படுமென அவர் மேலும் தெரிவித்தார்.

# தீவிரவாத ஒழிப்பு நடவடிக்கை டில்லியில் முதலமைச்சர் மாநாடு

(புதுடில்லி)

தீவிரவாத ஒழிப்பு நடவடிக்கை குறித்து ஆலோசிக்க மாநில முதலமைச்சர்களின் ஆலோசனைக் கூட்டம் பெப்ரவரி முதலாம் திகதி டில்லியில் நடைபெறவுள்ளது.

உள்நாட்டுப் பாதுகாப்பு, எல்லை தாண்டிய பயங்கரவாதம், மாவோயிஸ்ட் தீவிரவாதிகளின் வன்முறை உட்படப் பல்வேறு அம்சங்கள் குறித்து ஆலோசனை நடத்த மாநில முதலமைச்சர்கள் கூட்டத்துக்கு மத்திய அரசு ஏற்பாடு செய்துள்ளது.

பெப்ரவரி முதலாம் திகதி டில்லியில் நடக்கும் இந்த ஒரு நாள் கூட்டத்தை பிரதமர் மன்மோகன் சிங் தொடககி வைக்கவுள்ளார்.

பாதுகாப்புப் படைகளுக்கு தகுந்த பயிற்சிகள் அளிப்பது, வெற்றிடங்களை நிரப்புவது, நவீன ஆயுதங்களை கொள்முதல் செய்வது பற்றி கருத்து கேட்கப்பட்டு முடிவுகள் எடுக்கப்பட உள்ளன.

போலி நாணயத் தாள்களை தீவிரவாதிகள் இந்தியாவில் புழக்கத்தில் விட்டு பொருளாதார சீர்குலைவை ஏற்படுத்த முயற்சி செய்வது பற்றியும் இந்தக் கூட்டத்தில் விவாதிக்கப் படவுள்ளது.

தீவிரவாத நடவடிக்கைகள் குறித்துப் புலனாய்வுத் தகவல்களைப் பகிர்ந்து கொள்ளுதல், கடலோரப் பாதுகாப்பு, பொலிஸ் துறையை பலப்படுத்துவது குறித்தும் முதலமைச்சர்கள் விவாதிக்கவுள்ளனர்.

கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் இதேபோல நடந்த கூட்டத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் எந்த அளவுக்கு செயற்பாட்டுக்கு வந்துள்ளன என்பது குறித்தும் விளக்கம் அளிக்கப்படவுள்ளது.

# பழமொழி கூறும் பொருளியல் உண்மைகள்

**கொழும்பில் நடைபெற்ற தமிழர் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுரை**

*(நேற்றைய தொடர்ச்சி...)*

பொன்னாபரணங்களிற் பணத்தை முடக்குவது விரயமேயன்றி பொருளாதாரத்தை வளர்க்கும் முதலிடாக மாட்டாது என்பதுவே இவற்றின் ஒட்டு மொத்தமான முடிபு. இந்தக் கருத்து அன்றைய தமிழர்களுக்குப் புரியாத தொன்றல்ல என்பதை அன்று வழங்கிய "வெள்ளிக்குப்போட்ட பணமும் கொள்ளிக்குப் போட்ட பணமும் சரி" என்ற முதுமொழி தெளிவாக்கவில்லையா? சாதாரண மக்கள் அனுபவத்தில் உணர்ந்த ஒன்றைத்தான் பொருளியற் பண்டிதர்கள் இன்று பொருளியல் ஞானத்தின் ஒரு கண்டுபிடிப்பாகப் பறைசாற்றுகின்றனர்.

1970 களுக்குப் பின்னர் தடையற்ற சந்தைப் பொருளாதாரம் மறுமலர்ச்சி பெற்றுப் பூகோள மயவாக்கம் என்ற புதிய அலைவீச்சுடன் உலகெங்கும் பரந்து கொண்டாடப்படுவதை யாரும் இன்று மறுப்பதற்கில்லை.

இந்தப் பொருளாதாரத்தின் தாரக மந்திரமாக நிறைபோட்டிக் கோட்பாடு விளங்குகின்றது. உற்பத்தியாளரும் நுகர்வோரும் அரசாங்கங்களினதோ, தனிப்பட்ட நிறுவனங்களினதோ தலையீடின்றிச் சுதந்திரமாகப் பொருளாதாரப் பரிவர்த்தைனைகளில் ஈடுபடும் போதுதான் விலைகள் சரிந்து பொருள்களின் தொகை பெருகி அவற்றின் தரமும் உயர்ந்து மக்களின் நலனம் வளம் பெறுமென இக்கோட்பாடு நிறுவியுள்ளது.

இதனைக் கண்காணிப்பதற்காகத் தான் ஐக்கிய நாடுகள் சபையின் ஓர் அங்கமான உலக வர்த்தக நிறுவனமும் (World Trade Organization) இயங்குகின்றது. இவ்வாறான பொருளாதாரப் போட்டியின் நலனை உணர்ந்துதானே தமிழ் மக்கள் "கீரைக் கடைக்கும் எதிர்க்கடை வேண்டும்" என்று கூறினர்.

மேலும் சந்தையைப் பற்றியும் வியாபார நடைமுறைகளைப் பற்றியும் விபரிக்கும் "சாமான் மலிந்தாற் சந்தைக்கு வரும்", "விளம்பரமின்றேல் விற்பனையில்லை", "கொல்லன் தெருவில் ஊசி விற்கலாமா?" போன்ற முதுமொழிகளும் பல பொருளியற் தத்துவங்களைச் சாதாரண மக்களின் அனுபவங்கள் மூலமாக அவர்களின் மொழிநடையிலேயே நமக்கு உணர்த்தவில்லையா?

பொன்னாபரணங்களிற் பணத்தை முடக்குவது விரயமேயன்றி பொருளாதாரத்தை வளர்க்கும் முதலீடாக மாட்டாது என்பதுவே இவற்றின் ஒட்டு மொத்தமான முடிபு. இந்தக் கருத்து அன்றைய தமிழர்களுக்குப் புரியாத தொன்றல்ல என்பதை அன்று வழங்கிய "வெள்ளிக்குப்போட்ட பணமும் கொள்ளிக்குப் போட்ட பணமும் சரி" என்ற முதுமொழி தெளிவாக்கவில்லையா? சாதாரண மக்கள் அனுபவத்தில் உணாந்த ஒன்றைத்தான் பொருளியற் பண்டிதர்கள் இன்று பொருளியல் ஞானத்தின் ஒரு கண்டுபிடிப்பாகப் பறைசாற்றுகின்றனர்.

1970 களுக்குப் பின்னர் தடையற்ற சந்தைப் பொருளாதாரம் மறுமலர்ச்சி பெற்றுப் பூகோளமயவாக்கம் என்ற புதிய அலைவீச்சுடன் உலகெங்கும் பரந்து கொண்டாடப்படுவதை யாரும் இன்று மறுப்பதற்கில்லை. இந்தப் பொருளாதாரத்தின் தாரக மந்திரமாக நிறை போட்டிக் கோட்பாடு விளங்குகின்றது. உற்பத்தியாளரும் நுகர்வோரும் அரசாங்கங்களினதோ, தனிப்பட்ட நிறுவனங்களினதோ தலையீடின்றிச் சுதந்திரமாகப் பொருளாதாரப் பரிவர்த்தைனைகளில் ஈடுபடும்போதுதான் விலைகள் சரிந்து பொருள்களின் தொகை பெருகி அவற்றின் தரமும் உயர்ந்து மக்களின் நலனும் வளம்பெறுமென இக்கோட்பாடு நிறுவியுள்ளது. இதனைக் கண்காணிப்பதற்காகத்தான் ஐக்கிய நாடுகள் சபையின் ஓர் அங்கமான உலக வர்த்தக நிறுவனமும் (World Trade Organization) இயங்குகின்றது. இவ்வாறான பொருளாதாரப் போட்டியின் நலனை உணர்ந்துதானே தமிழ் மக்கள் "கீரைக் கடைக்கும் எதிர்க் கடை வேண்டும்" என்று கூறினர்.

மேலும், சந்தையைப் பற்றியும் வியாபார நடைமுறைகளைப் பற்றியும் விபரிக்கும் "சாமான் மலிந்தாற் சந்தைக்கு வரும்" "விளம்பரமின்றேல் விற்பனையில்லை" "கொல்லன் தெருவில் ஊசி விற்கலாமா?" போன்ற முதுமொழிகளும் பல பொருளியற் தத்துவங்களைச் சாதாரண மக்களின் அனுபவங்கள் மூலமாக அவர்களின் மொழிநடையிலேயே நமக்கு உணர்த்தவில்லையா?

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் இலங்கையின் சாதாரண குடும்பங்களின் நுகர்வுப் பொருள்களிற் கணிசமான மாற்றங்கள் இடம் பெற்றதை அக்கால அரசாங்க நீல ஏடுகள் (Blue Books) எடுத்துக்காட்டுகின்றன. இறக்குமதிப் பிடவைகள், மண்ணெண்ணெய் விளக்குகள். தீப்பெட்டிக் குச்சுகள், செமபு வெண்கலப் பாத்திரங்கள் போன்ற நுகர்வுப் பொருள்களின் பாவனை சாதாரண வீடுகளிலும் அதிகரிக்கலாயின. "செம்பு நடமாடக் குயவன் குடிபோகிறான்" என்ற பழமொழி இந்த மாற்றமொன்றை வெகு அழகாகச் சித்தரிக்கின்றது.

நகரங்களும் பெருகித் தொழில் வாய்ப்பும் அங்கே அதிகரித்ததுடன் கிராமப் புறஙகளில் வாழ்ந்த காளையர் தொழில்தேடி நகரங்களுக்குப் படையெடுத்தனர். அவ்வாறு நகரங்களுக்குச் செல்லாது வீட்டிலேயே உறங்கிக் கிடந்தவர்கள் உற்றார் பெற்றாரின் மதிப்பையும் இழக்கலாயினர். "உண்டாத் திண்டா ஊரில என்ன வேலை?" என்ற வினா ஒரு பழமொழி போன்று இதனை விளக்குகிறது.

### பழமொழிகள் சேகரிக்கப்பட வேண்டும்.

பொருளாதார மாற்றங்களும் கல்வி அபிவிருத்தியும் தமிழரிடையே ஏற்பட்டுங்கூட சில சமூக சம்பிரதாயங்கள் இளகாமல் இறுக்கமாய் இருப்பதுண்டு. இதனால் நவீன பொருளாதார மாற்றங்களுக்குக் கலாசாரம் ஒரு தடையா? என்ற பிரச்சினை பொருளியலாளர்களின் மத்தியில் இன்றும் தொடர்ந்து பேசப் படுகின்றது.

பல ஏடறியா இலக்கியங்களைப் போன்று பழமொழிகளும் காலத்துக்குக் காலம் உருவாகி பின்னர் மறைந்து போகும் தன்மையன. இவை சாதாரண மக்களின் பேச்சுவழக்கில் பெரிதும் நடமாடுவதால் அம்மக்களின் அனுபவங்களையும் அவர்கள் அறிந்த உண்மைகளையும் துல்லியமாக வெளிப்படுத்தும் முக்கிய சாதனங்களாகும். இப் பழமொழிகள் காலத்துக்குக் காலம் திரட்டப்பட்டுச் சேகரிக்கப்படாவிட்டால் பொருளியல், சமூகவியல் மற்றும் மக்களோடு சம்பந்தப்பட்ட அறிவியல்களை ஆய்வு செய்வோர் தமது ஆய்வுக்குரிய ஓர் அரிய மூலப்பொருளை இழக்க நேரிடும். வாய்வழி வரலாறு (oral histozy) என்று வரலாற்றியலில் ஒரு புதுத்துறை அண்மையில் உருவாகி அது இன்று தனக்கெனச் சில வரையறைகளை வகுத்து வரலாற்றியலில் ஒரு தனித்துறையாக வளர்ந்துள்ளதை வரலாற்று மாணவர் அறிவர். அதேபோன்று பழமொழித் திரட்டும் அது பற்றிய விரிவான ஆராய்ச்சியும் தமிழிலே மேற்கொள்ளப்படல் வேண்டும்.

*(முற்றும்)*

கலாநிதி அமீர் அலி
மேற்கு அவுஸ்திரேலியா

(08ம் பக்கத் தொடர்ச்சி...)

ஆனாலும் நாம் அந்த முயற்சியை கைவிட்டு விடவில்லை. இலங்கை இந்திய ஒப்பந்தத்தை நடை முறைப்படுத்துமாறு நாம் கடந்த 20 வருடங்களாக வலியுறுத்தி வந்திருக்கின்றோம்.

ஜனாதிபதி பிரேமதாசா, ஜனாதிபதி டி.பி,விஜயதுங்க, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க என்று எல்லோரிடமும் கேட்டிருந்தோம்.

யாருமே முன்வந்திருக்கவில்லை.

எமது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அவர்களுக்கு மட்டுமே அந்த அரசியல் துணிச்சலும், எமது நியாயமான கோரிக்கைகள் மீதான விருப்பமும் பிறந்திருக்கின்றது. கிழக்கு மாகாணத்தில் ஒரு அடையாளமாக அதை ஆரம்பித்து வைத்திருக்கின்றார் எமது ஜனாதிபதி அவர்கள். ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அவர்களின் உறுதிமிக்க அரசியல் துணிச்சலை நான் பாராட்டுகின்றேன்.

வருகின்ற உள்ளூராட்சித் தேர்தலை அடுத்து வடக்கு மாகாண சபைக்கான தேர்தல் நடக்கப்போகின்றது.

அதன் பின்னர் இலங்கையில் உள்ள அனைத்து மாகாண சபைகளுக்கும் இந்த நாட்டில் வாழுகின்ற அனைத்து இன மக்களின் மாகாணங்களுக்கும் 13 ஆவது திருத்தச்சட்டத்தின் பிரகாரம் இன்னமும் இருக்க முடிந்த மேலும் கூடிய அதிகாரங்கள் வழங்கப்படும்.

இதுவே நடைமுறைச் சாத்தியமானது. இதிலிருந்து நாம் ஐக்கிய இலங் கைக்குள்

சமாதான சக வாழ்வும் சமவுரிமையும் என்ற இலக்கு நோக்கி விரைவாகச் செல்ல முடியும். இதை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அவர்கள் நிச்சயமாக தொடர்ந்தும் முன்னெடுப்பார். அதற்கு நாம் பொறுப்பு.

எந்த அளவிற்கு நாம் ஜனாதிபதி அவர்களை நோக்கி நெருங்கிச் செல்கின்றோமோ, எந்த அளவிற்கு நாம் அவர் மீதும் அரசாங்கத்தின் மீதும் நம்பிக்கை கொண்டு செயற்படுகின்றோமோ, எந்த அளவிற்கு இன்னமும் அதிகமாக எமது சரியான திசை வழி நோக்கி மக்கள் அணிதிரள்கின்றார்களோ, அந்த அளவிற்கு விரைவாக அனைத்தும் நடக்கும். இதற்கான உறுதி மொழியினை ஜனாதிபதி அவர்கள் மீது நம்பிக்கை கொண்டு நான் உங்களுக்கு வழங்குகின்றேன்.

தென்னிலங்கையின் சுதந்திரம் தங்கம் என்றால், வட இலங்கையின் சுதந்திரம் தகரமாக இருக்க முடியாது, அதுவும் தங்கமாகவே இருக்க வேண்டும்.

இதை நான் எனது சகோதரர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அவர்களிடம் அடிக்கடி தெரிவித்து வருகின்றேன். அவரும் இதை தெளிவாக புரிந்து வைத்திருக்கின்றார்.

*எம் நேசத்திற்குரிய மக்களே!....*

எமது தேசத்தில் பெரும் புயலடித்து ஓய்ந்திருக்கின்றது. புயல்மழை ஓய்ந்தாலும்

சிறு தூறல் தொடர்வது போல் ஆங்காங்கே சில வன்முறைச் சம்பவங்கள் நடந்து வருவதாகக் கூறும் செய்திகள் என் நெஞ்சைப் பிளக் கின்றது.

மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதிப்பது போல் கடந்த காலங்களில் எதிர்காலம் குறித்த நம்பிக்கையீனங் களோடு துயரங்களைச் சுமந்து நின்ற எமது மக்கள் மீது மேலும் துயரங்களைச் சுமத்த எத்தனிப்பதுபோல் இந்தச் சம்பவங்கள் நடந்து வருகின்றன.

இவைகள் கடந்த காலங்களோடு ஒப்பிடும் போது, வகையிலும் தொகையிலும் சிறு துளியாக இருப்பினும் இவைகளை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அவர்களும் இது குறித்து அண்மையில் ஊடகங்களுக்கு பகிரங்கமாகவே தெரிவித்திருக்கின்றார்.


யாழ் குடாநாட்டில் மட்டுமன்றி ஏனைய பிரதேசங்களிலும் குறிப்பாக தென்னிலங்கை பிரதேசங்களிலும் கொலை, கொள்ளை போன்ற வன்முறைகள் நடந்து கொண்டுதான் இருக்கின்றதென்றும் யாழ் குடாநாட்டிலும் நடக்கின்ற வன்முறைகளுக்கு காரணமானவர்களை சட்டத்தின் முன் நிறுத்துவோம் என்றும் பகிரங்கமாகவே தெரிவித்திருக்கின்றார்.

ஜனாதிபதி அவர்களின் இந்த உறுதியான கருத்தை நான் வரவேற்கின்றேன். அதை விரைவாகச் செய்ய வேண்டும் என்றும் நான் அவரிடம் வேண்டுகோள் விடுத்து வருகின்றேன்.

இந்த நாட்டை உலுப்பிக் கொண்டிருந்த பாரியதொரு யுத்தத்தையே முடிவிற்கு கொண்டுவந்திருந்த ஜனாதிபதி அவர்கள் இதையும் செய்து முடிப்பார் என்பதில் எமக்கு நம்பிக்கை உண்டு.

நடந்து முடிந்த சில வன்முறைச் சம்பவங்களின் போது பாதிக்கப்பட்டவர்களுக்கு நான் ஆறுதலும், எதிர்காலம் குறித்த நம்பிக்கையினையும் ஊட்ட விரும்புகின்றேன்.

கொல்லப்பட்டவர்களின் குடும்பத்தவர்கள் உறவினர்களுக்கு நான் ஆறுதல் தெரிவிக்கின்றேன்.



கடத்திச்செல்லப்பட்டவர்கள் உடல் மற்றும் உயிர்ச் சேதம் இன்றி வீடு திரும்ப நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் நான் ஜனாதிபதி அவர்களிடம் கேட்டிருக்கின்றேன்.

நம்பிக்கையோடு காத்திருங்கள். ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அவர்களின் முயற்சியின்துணை கொண்டு எமது வரலாற்று வாழ்விடங்களை இன்னமும் முழுமையான ஜனநாயக மயப்படுத்தப்பட்ட பூமியாக நாம் மாற்றியமைப்போம்.

இதைச் செய்து முடிப்பதில் சகலருக்கும் பங்குண்டு. மக்கள் எமக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். வன்முறைகளுக்கு யாரும் இனி இந்த மண்ணில் இடமளிக்கக் கூடாது என்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

புலிகள் அமைப்பில் இருந்து படையினரிடம் சரணடைந்தவர்கள், மற்றும் கைது செய்யப்பட்டவர்கள் புனர்வாழ்வு அளிக்கப்பட்டு ஜனாதிபதி அவர்களினாலும், பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபே ராஜபக்ச அவர்களினாலும் விடுவிக்கப்பட்டு வருகின்றார்கள்

அவர்கள் கடந்த காலங்களில் தவறான முறையில் வழிநடத்தப்பட்டிருந்தாலும், வன்முறைகள் நடத்துவதற்கு தூண்டிவிடப்பட்டிருந்தாலும் அவர்கள் இப்போது பொதுவாழ்வில் ஈடுபடுவதற்கு அனுமதிக்கப்பட்டு வருகின்றார்கள்.

அவர்களும் எமது மக்களின் பிள்ளைகளே!... அவர்கள் மீதும் நான் அக்கறை கொண்டிருக்கின்றேன். அன்பு செலுத்துகின்றேன்.

பொதுவாழ்வில் ஈடுபடுவதற்கு அவர்களுக்கு கிடைத்த சந்தர்ப்பங்களை அவர்கள் ஒரு போதும் துஷ்பிரயோகம் செய்துவிடக்கூடாது என்பதையே நான் விரும்புகின்றேன்.


வன்முறையில் ஈடுபடுவோர், அல்லது சாதாரண குடிமக்களுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்துவோர் யாராக இருப்பினும் அவர்கள் பேதமின்றி சட்டத்தின் முன் நிறுத்தப்படுவது தவிர்க்க முடியாத ஒன்றாகும்.

நான் எமது கட்சியின் உறுப்பினர்களுக்கு ஆரம்பங்களில் இருந்தே எமது கட்சியின் கட்டாயமான கட்டளைகளை பிறப்பித்து வருகின்றேன்.

ஒரு ஊசியை அல்லது நூலையேனும் பொதுமக்களிடமிருந்து அபகரிக்கக் கூடாது பொதுமக்களிடம் இருந்து கப்பமோ, நன்கொடையோ பெறக்கூடாது. மக்களை பலாத்காரப்படுத்தி செயல்களில் ஈடுபடுத்தக்கூடாது. பொது மக்களை துன்புறுத்தவோ அல்லது அச்சுறுத்தல் செய்யவோ கூடாது...

இதுபோன்ற கட்டாய கட்டளைகளை எமது கட்சியின் உறுப்பினர்களுக்கு பிறப்பித்திருக்கும் நான் மக்கள் விரோத செயல்கள் எமது கட்சியின் கொள்கையோ அல்லது நடைமுறையோ இல்லை என்றும், மீறி நடந்தால் அவ்வாறானவர்களுக்கு எமது கட்சியில் இடம் இல்லை என்றும் தெரிவித்திருக்கின்றேன்.

எமது கட்சியின் உறுப்பினர்களுக்கு கட்சியின் கட்டாய கட்டளைகளை பிறப்பித்திருக்கும் நான் எமது தமிழ் சமூகத்தில் உள்ள அனைத்து இளம் சந்ததியினருக்கும் ஒரு தந்தையின் ஸ்தானத்தில் இருந்து சில அறிவுரைகளை வழங்க விரும்புகின்றேன்.



புனர்வாழ்வு அளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்ட முன்னாள் புலிகளின் உறுப்பினர்களாக இருந்தாலும் சரி, அல்லது வேறு அமைப்புகளில் இருந்தவர்களாயினும் சரி, பொதுவாக அனைத்து தரப்பினர்களுக்கும் இந்த அறிவுரையை நான் விடுக்க விரும்புகின்றேன்.

அழிவாயுதங்கள் உங்களை வழி நடத்திய காலம் வெறும் இழப்புக்களோடும் துயரங்களோடும் முடிந்து விட்டது. இனியாவது அறிவாயுதங்கள் உங்களை வழிநடத்தட்டும்.

எமது மக்கள் கடந்த கால வன்முறைகளால் இருண்ட யுகத்தினுள் தள்ளப்பட்டிருந்தார்கள். இருண்ட யுகத்திலிருந்து எமது மக்கள் மீட்டெடுக்கப்பட்டிருக்கிறார்கள். அதற்காகவே நான் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அவர்களுக்கு அடிக்கடி நன்றி தெரிவித்து வருகின்றேன்.

அமைதி திரும்பியிருக்கின்றது. திரும்பிய அமைதியை நாம் விரும்பிய திசை நோக்கி நகர்த்திச் செல்ல உங்களது பங்களிப்பு தேவை. ஒரு சிலர் செய்கின்ற குற்றச்செயல்களால் ஒட்டு மொத்த தமிழ் சமுதாயமுமே பாதிப்படைகின்றது.

குற்றச்செயல்களில் ஈடுபடுவோரை சட்டத்தின் முன் நிறுத்தி எமது மக்களுக்கான பாதுகாப்பான வாழ்க்கையை தொடர்ந்தும் உத்தரவாதப்படுத்த நீங்களும் உழைக்க வேண்டும். அதற்காக நீங்கள் விழிப்புணர்வு கொண்ட சமூகமாக உருவெடுக்க வேண்டும்.

உங்கள் அனைவருக்கும் படிப்படியாக வேலை வாய்ப்புகள் வழங்கப்படவுள்ளன. தொழில் முயற்சிகளுக்கான ஏற்பாடுகளை நாம் தொடர்ந்தும் செய்து வருகின்றோம்.

நீங்களே எமது சமுதாயத்தின் தூண்கள். வன்முறைச் சம்பவங்களை தடுத்து நிறுத்த நீங்களும் பங்களிக்க வேண்டும்.

இங்கு வந்திருக்கும் எமது மாணவச்செல்வங்கள் மற்றும் இளைய சமுதாயத்தினருக்கு உரிமைகளோடு நாம் தலைநிமிர்ந்து வாழ முடிந்த ஒரு ஜனநாயக பூமியை உருவாக்கிக் கொடுக்க வேண்டும்.

கடந்த கால தமிழ் அரசியல் தலைமைகள் எமது அரசியலுரிமை பிரச்சினையை

அடுத்தடுத்து வந்த சந்ததியினர் மீதும் சுமத்தி விட்டுச் சென்றிருக்கிறார்கள்.

அது போல் நானும் அடுத்து வரும் சந்ததியினர் மீது எமது அரசியலுரிமை பிரச்சினையை சுமத்தி விட்டு செல்ல ஒருபோதும் சம்மதிக்கப்போவதில்லை.

எமது காலத்திலேயே எல்லாப்பிரச்சினைகளுக்கும் நாம் தீர்வு காண விரும்புகின்றோம்.

அதற்காகவே நாம் கடந்த கால தமிழ் தலைமைகள் போல் உரிமை உரிமை என்று பேசிக்கொண்டிருப்பதோடு மட்டும் நின்று விடாமல் உரிமைகளை அடைவதற்கான நடைமுறைச் சாத்தியமான வழிமுறையினையும் தேர்தெடுத்திருக்கின்றோம்.

அம்மண தேசத்தில் உடைகள் அணிந்திருப்பவன் கோமாளி என்பார்கள். அதுபோலவே எமது அரசியலுரிமையை தீர்ப்பதற்கான எந்தவொரு சாத்தியமான வழிமுறையினையும் கொண்டிராத தவறான தமிழ் அரசியல் தலைமைகள் மத்தியில் நாம் மட்டும் வேறுபட்டவர்களாக சித்தரிக்கப்படுகின்றோம்.

ஏனெனில் எம்மிடம் ஒரு இலக்கும், அதை அடைவதற்கான சாத்தியமான வழிமுறையும் உண்டு. இதனால் சக அரசியல் தலைமைகளுக்கு எம்மீதான அரசியல் பயம் உருவாகியிருக்கின்றது

இந்த அரசியல் போட்டி காரணமாகவே எம்மீதான சேறடிப்புகள் தொடர்ந்தும் நடத்தப்பட்டு வருகின்றன. அதற்காக சில ஊடகங்களையும் அவர்கள் பயன்படுத்தி வருகின்றார்கள்.

புழுதி வாரி எம் மேல் தூற்றுவோர் தூற்றட்டும். பூக்களை வாரி எம் மேல் போற்றுவோர் போற்றட்டும். நாம் செல்லும் வழி நேர்வழியானது. இதுவே வெற்றியடைந்தும் வருகின்றது.

எமது மக்கள் பட்டு வந்த துயரங்கள், வலிகள், வதைகளோடு ஒப்பிடும் போது எம் மீது வீசப்படும் வசைகள் மிக சாதாரணமானவையே.

எமது மக்களுக்காக எந்த வசைகளையும், எந்த அவதூறுகளையும் நாம் ஏற்கத் தயாராகவே இருக்கின்றோம். பெரும்புயலை எதிர்கொண்டவர்கள் நாங்கள்

தூற்றல்கள் யாவும் எமக்கு சிறு தூறல்கள்.!..

மக்கள் எம் பக்கம், நாம் மக்களின் பக்கம். அவதூறு பொழிவோர் எமக்கு பொருட்டல்ல. ஊர் பார்த்த உண்மைகளே எமக்கு பிரதானம். எமது மக்களின் கருத்துக்கள் மீதே நாம் அக்கறை செலுத்துவோம்.

எத்தனை எதிர்ப்பறிக்கைகள் விட்டாலும், எழுச்சியாக பேசினாலும் எத்தனை தீர்மானங்கள் எடுத்தாலும் இங்கே எமது நட்பு நாடி வந்திருக்கும் இவருடன் பேசித்தான் எல்லா பிரச்சினைக்கும் தீர்வு காண முடியும்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அவர்களினதும் எங்களினதும் இணைந்த கர்ங்கள் மட்டும்தான் இங்கு எதையும் சாதிக்கும், அது அபிவிருத்தியாக இருந்தால் என்ன, வாழ்வாதார வசதிகளாக இருந்தால் என்ன, அரசியலுரிமை பிரச்சினையாக இருந்தால் என்ன அனைத்தும் எங்களது இணைந்த கரங்களால் மட்டுமே நடத்தி முடிக்கப்படும்.

ஜனாதிபதி அவர்களின் நேசக்கரங்களை பற்றிப்பிடித்து பெறவேண்டிய அனைத்தையும் பெற்றுக்கொள்ள நீங்கள் அனைவரும் மாபெரும் சக்தியாக எழுந்து வரவேண்டும் என்று நான் வேண்டுகோள் விடுக்கின்றேன்.

உறவுக்கு கரம் கொடுப்போம்! உரிமைக்கு குரல் கொடுப்போம்!!...

***என்றும் நாம் மக்களுக்காக!....***

# ஒரு வாரத்துக்கு ஐந்து நாள் வேலை; போர்க்கொடி தூக்கும் தொழிற்சங்கங்கள்

(கொழும்பு)

அரசாங்கத்துறை ஊழியர்களுடன் இணைந்து வாரத்திற்கு ஐந்து நாள் என்ற வேலைத் திட்டத்தை எதிர்க்கும் நடவடிக்கையில் ஈடுபடவுள்ளதாக தனியார்த்துறை தொழிற்சங்கங்கள் அறிவித்துள்ளன.

அனைத்துக் கம்பனி ஊழியர் சங்கம், சுதந்திர வர்த்தக வலயம் மற்றும் பொதுச் சேவைகள் ஊழியர் சங்கம் என்பன, தாம் வாரத்துக்கு ஐந்து நாள் வேலைத்திட்டத்தை எதிர்ப்பதாகக் கூறின.

இந்தத் திட்டம் நடைமுறைக்கு வந்தால் ஒருவர் ஒரு நாளைக்கு வேலை செய்யும் நேரம் அதிகரிக்கும். ஆனால் சம்பளம் அதிகரிக்கப்பட மாட்டாது என பொதுச் சேவைகள் ஊழியர் சங்கத்தின் செயலாளர் அன்ரன் மார்க்கஸ் தெரிவித்தார்.

தொழிற்சங்கங்களும் தேசிய தொழில் கவுன்சிலும் இந்தத் திட்டத்தை அமுல்படுத்தும் தெரிவை வேலை கொள்வோரும் ஊழியர்களும் சேர்ந்தே மேற்கொள்ள வேண்டும் எனக் கூறியுள்ளன.

இதேவேளை, இந்த வேலைத்திட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து பெப்ரவரி மாதம் நாடளாவிய ரீதியில் நடத்தப்படவுள்ளதாக அனைத்துக் கம்பனி ஊழியர் சங்கத்தின் தலைவர் வசந்த சமரசிங்க தெரிவித்தார்.

இதற்காக ஏனைய தொழிற்சங்கங்களின் ஆதரவையும் திரட்டி வருவதாகவும் மேற்படி வேலைத்திட்டம் உலகில் எங்கும் நடக்காததொன்று எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன், இந்த நடவடிக்கையானர் அரசாங்கமும் வேலைகொள்வோரும் இணைந்து தொழிலாளர்களை சுரண்டுவதற்கு மேற்கொண்ட திட்டமாகும் என அவர் மேலும் குறிப்பிட்டார்.

# ஊடகவியலாளர்களுக்கு விசேட இணையத்தள பயிற்சி

(கொழும்பு)

பிராந்திய ஊடகவியலாளர்களுக்கு தொலைக்கல்வி நிலையங்கள் ஊடாக இணையத்தளம் மற்றும் மின்னஞ்சல் தொடர்பான ஒரு நாள் பயிற்சி பட்டறையை எதிர்வரும் பெப்ரவரி முதலாம் திகதி தகவல் திணைக்களம் நடத்தவுள்ளது.

நாடளாவிய ரீதியிலுள்ள 20 தொலைக் கல்வி நிலையங்கள் ஊடாகவே இந்த பயிற்சி பட்ட்றை நடத்தப்படவுள்ளது.

கொழும்பு பல்கலைக்கழக கணனி பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர்கள் கொழும்பு, கம்பஹா, காலி, இரத்தினபுரி, அம்பாறை, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, வவுனியா, திருகோணமலை, பதுளை, அனுராதபுரம், மொனராகலை, ஹம்பாந்தோட்டை, கேகாலை மற்றும் கண்டி ஆகிய மாவட்டங்களில் பெப்ரவரி முதலாம் திகதி குறித்த பயிற்சி பட்டறை நடைபெறவுள்ளது.

இப்பயிற்சி பட்டறையில் கலந்துகொள்ள விரும்பும் பிராந்திய ஊடகவியலாளர்கள் பணிப்பாளர் நாயகம், தகவல் திணைக்களம், கொழும்பு-5 என்ற முகவரிக்கு சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்ப படிவத்தை எதிர்வரும் ஜனவரி 21 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்புமாறு கோரப்பட்டுள்ளனர்.

# கிழக்கு நோக்கி நிவாரண உதவி

வவுனியாவில் வர்த்தகளிடமிருந்து சேகரிக்கப்பட்ட 20 லட்சம் ரூபா பெறுமதியான அத்தியாவசியப் பொருட்களை வவுனியா வர்த்தக சங்கம் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மட்டக்களப்பு மாவட்டத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதில் சீனி, அரிசி, சவர்க்காரம், ஆடை உட்பட, உடனடியாகத் தேவைப்படும் அத்தியாவசியப் பொருட்கள் அடங்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (39)

# உள்ளூராட்சி தேர்தல் களம்; முஸ்லிம் காங்கிரஸ் புது வியூகம்

(வவுனியா)

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி வவுனியா மற்றும் மன்னார் மாவட்டத்தில் 4 இடங்களில் தனித்து மரச்சின்னத்திலும், 4 இடங்களில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் இணைந்து வெற்றிலைச் சின்னத்திலும் போட்டியிடத் தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கான வேட்பாளர்களைத் தெரிவு செய்து தேர்தலில் போட்டியிடத் தீர்மானித்துள்ளதாக கட்சியின் வவுனியா மாவட்ட அமைப்பாளர் நாகூரான் மாகீத் தெரிவித்துள்ளார். (39)

# சைக்கிள் ஓட்டப்போட்டி

விமானப்படையின் 60ஆவது ஆண்டை முன்னிட்டு வவுனியாவிலிருந்து அனுராதபுரத்திற்கான சைக்கிள்ஓட்டப் போட்டியொன்று நடத்தப்படவுள்ளது.

30கிலோ மீற்றர் தூரம் இடம்பெறும் இப்போட்டியில் ஆண்கள் பங்குபற்றவுள்ளனர்.

வவுனியா மூன்று முறிப்புப் பகுதியில் இருந்து ஆரம்பமாகி அனுராதபுரம் மணிக்கூட்டுச் சந்திப் பகுதியில் முடிவடையும்.

இதில் வவுனியா, மன்னார் உள்ளிட்ட வடமாகாண வீரர்கள் கலந்துகொள்ளவுள்ளதுடன் போட்டியில் குறிப்பிட்ட இடத்தை ஓடி முடிக்கும் வீரர்கள் அனைவருக்கும் பரிசில்கள் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (39)

# திறப்பு விழா

மணியந்தோட்டம் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் திறப்பு விழா நாளை காலை தலைவர் கென்றி வஸ்ரியன் தலைமையில் நடைபெறவுள்ளது.

மேற்படி நிகழ்வில்; பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலன்ரின் (உதயன்), சிறப்பு விருந்தினராக நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் மற்றும் ஈ.பி.டி.பி நல்லூர் தொகுதி அமைப்பாளர் அ.இரவீந்திரதாசனும் கலந்துகொள்ளவுள்ளனர். (26)

# தகவல் தொழில்நுட்பத்தில் புரட்சி; தொலைத்தொடர்பு அமைச்சு பெருமிதம்

(கொழும்பு)

எதிர்வரும் 6 வருட காலத்தில் நாட்டில் தகவல் தொழில்நுட்பத் துறையில் பாரியளவிலான புரட்சி ஏற்படும் என்று தொலைத் தொடர்பு தொழில்நுட்ப அமைச்சின் செயலாளர் நிமல் அத்துக்கோறள தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தெரிவிக்கையில் -

மகிந்த சிந்தனையில் தகவல் மற்றும் தொலைத்தொடர்பு தொழில் நுட்பத்திற்கு முக்கிய இடம் அளிக்கப்பட்டுள்ளது.

அடுத்த 6 வருட காலத்திற்குள் 75 சதவீதமதன மக்களுக்குத் தகவல் தொழில்நுட்ப அறிவை வழங்குவது அரசாங்கத் தின் நோக்கமாகும்.

தகவல் தொழில்நுட்பம் சம்பந்தமான தேசியக் கொள்ளை நடைமுறைக்கு இடப்பட்டதும் இந்த நோக்கம் நிறைவேற்றப்படும் என்றார்.

பாடசாலை கல்வித் திட்டங்களில் தகவல் தொழில்நுட்பம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இக் கிராமத் திட்டத்தின் அடிப்படையில் உலக நாடுகளில் தங்கியுள்ள இலங்கை கல்விமான்களினதும், நிபுணர்களினதும் அறிவையும், அனுபவத்தையும் இணையத்தளத்தின் மூலம் பெறுவதற்கான வசதிகள் வழங்கப்பட்டுள்ளன.

அரச ஊழியர்களுக்கும் தகவல் தொழில்நுட்ப அறிவு வழங்கப்படும். நினசல மற்றும் விதாதா நிலையங்களின் மூலம் தகவல் தொழில்நுட்ப அறிவு கிராமப்புற மக்களுக்கு வழங்கப்படுகிறது.

## அரங்கத்துடனான தேர்தல்...

அக்கூட்டமைப்பில் இருந்து விலகுவோம் என தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

தமிழ்க் கட்சிகளின் அரங்கத்திற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் தேர்தல் தொடர்பாகப் புரிந்துணர்வை ஏற்படுத்தி பொதுச்சின்னத்தில் போட்டியிடுவதற்கான யோசனைகள் முன்வைக்கப்பட்டன. எனினும், தமிழ் அரங்கத்திலுள்ள கட்சிகளில் ஆனந்தசங்கரி, சித்தார்த்தன் போன்றோரின் கட்சிகளை மட்டும் கூட்டமைப்பிற்குள் உள்வாங்க கூட்டமைப்பு முடிவுசெய்திருந்தது.

தமிழ் அரங்கத்தினுள் ஆரம்பம்முதல் முக்கிய பங்கு வகித்த சிவாஜிலிங்கம் போன்றோருடன் இணைந்து செயற்படுவதில் கூட்டமைப்பு தயக்கம் காட்டி வருவது குறித்து பலரும் சந்தேகம் தெரிவித்திருந்தனர். புலிகளின் தீவிர ஆதரவாளராக இன்றும் கருதப்படும் சிவாஜிலிங்கம் போன்றோரை இணைப்பது இந்தியாவிற்கு அதிருப்தியை ஏற்படுத்தும் என்ற காரணமும் கூட்டமைப்பின் முடிவிற்கு பின்னால் இருக்கலாம் என்றே கருதப்படுகிறது.

சிவாஜிலிங்கத்தை கூட்டமைப்பிற்குள் இணைப்பதற்கு கட்சியின் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் உத்தியோகபூர்வ பேச்சாளருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் கடும் எதிர்ப்புத் தெரிவித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில், மட்டக்களப்பு மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்க்கூட்டமைப்பின் மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்களும் தமிழ்க்கட்சிகளின் அரங்கத்துடன் கூட்டணி அமைத்து உள்ளூராட்சித் தேர்தலில் களம் இறங்கும் யோசனைக்குக் கடும் அதிருப்தியையும் எதிர்ப்பையும் வெளியிட்டுள்ளதாக கொழும்பு இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா நேற்று திங்கட்கிழமை மட்டக்களப்புக்கு சென்றிருந்தபோது அம்மாவட்ட கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான பொன்.செல்வராசா, சீ.யோகேஸ்வரன், பா.அரியநேத்திரன் ஆகிய மூவரும் மாவை சேனாதிராஜாவிடம் தமது அதிருப்தியைத் தெரிவித்துள்ளனர் என இவ் இணையத்தளம் மேலும் தெரிவித்துள்ளது.

தமிழ் மக்களின் நீண்டகாலப்பிரச்சினையான இனநெருக்கடிக்கு அரசியல் தீர்வொன்றைப் பெற்றுக்கொள்வதற்காக சகல தமிழ்க் கட்சிகளும் அமைப்புகளும் கருத்தொருமைப்பாட்டுடன் யோசனையொன்றைத் தயாரிக்கும் முயற்சியாகவே தமிழ்க் கட்சிகளின் அரங்கத்திற்கும் தமிழ்க் கூட்டமைப்பிற்கும் இடையில் உப குழுக்கள் அமைக்கப்பட்டிருப்பதைச் சுட்டிக்காட்டியிருக்கும் இவர்கள், உள்ளூராட்சித் தேர்தலில் கூட்டுச் சேர முயற்சிப்பது அர்த்தமற்றது என்றும் இது தொடர்பாக மேற்கொள்ளப்படும் முயற்சிகளையிட்டுத் தாங்கள் கடும் அதிருப்தியடைந்திருப்பதாகவும் மாவை சேனாதிராஜாவின் கவனத்திற்குக் கொண்டு சென்றுள்ளனர்.

மட்டக்களப்பில் பொன்.செல்வராஜா எம்.பி.யின் இல்லத்தில் நேற்று இடம்பெற்ற சந்திப்பின் போதே தமது கருத்துகளை மாவை சேனாதிராஜாவின் கவனத்திற்கு கொண்டு சென்றுள்ளதாக அரியநேத்திரன் கூறினார்.

இது இவ்வாறிருக்க கூட்டமைப்புடன் இணைந்து போட்டியிடத் தீர்மானித்துள்ள முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பின் செயலாளர் நாயகமுமாகிய எம்.கே.சிவாஜிலிங்கம் மற்றும் ஈ.பி.ஆர்.எல்.எவ் அணித்தலைவர் வரதராஜப்பெருமாள் ஆகியோரை கூட்டமைப்பில் இணைத்துக் கொள்ள முடியாதென்ற கூட்டமைப்பின் முடிவினையிட்டு தமிழ் அரங்கம் அதிருப்தி தெரிவித்துள்ளது.

சிவாஜிலிங்கம் மற்றும் வரதராஜப்பெருமாள் ஆகியோர் கூட்டமைப்பில் இணைத்துக் கொள்ளப்படாவிட்டால் தாங்களும் அக்கூட்டமைப்பில் இருந்து விலகுவோம் என தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

இதேவேளை, எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தங்களை கூட்டமைப்பில் இணைத்துக் கொள்ளாவிட்டால் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கை மற்றும் எடுக்கப்படவேண்டிய தீர்வுகள் குறித்து எதிர்வரும் 20ஆம் திகதி கூடவுள்ள கட்சியின் உயர் மட்டக் குழுக் கூட்டத்தில் முடிவெடுக்கப் படுமென எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்திருப்பதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

**தடுப்புக்காவலில்...**

தேகநபர்களுடன் கலந்துரையாடவுள்ளனர். பிரஸ்தாப நால்வர் குழுவின் தலைவராக பிரதி சட்டமா அதிபர் சவீந்திர பெர்ணான்டோ செயற்படவுள் ளார். சிரேஷ்ட அரச வழக்கறி ஞர் குமாரத்னம், சேத்திய குண சேக்கர, தினால் இரத்நாயக்க ஆகியோர் அதன் ஏனைய உறுப்பினர்களாவர்.


**இந்திய இராணுவச்...**

கசிந்துள்ளன.

குறித்த வீரர் தூதுவராலயத்தின் அருகிலுள்ள கடையொன்றுக்குச் சென்றபோது அங்கு வந்திருந்த இளம் பெண்ணொருவருக்கே இவ்வாறு கன்னத்தில் முத்தம் கொடுத்துள்ளார்.

ஆயினும், குறித்த பெண்ணும், பொது மக்களும் இது தொடர்பில் வீரரை எச்சரித்துள்ளதுடன், பொலிஸில் முறைப்பாடு எதனையும் பதிவு செய்யவில்லை.

மேலும், இந்த விவகாரம் அம்பலத்துக்கு வராதவகையில், உடனடியாக தூதுவராலய உயர் அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதுடன், குறித்த வீரர் தொடர்பில் தாம் உரிய நடவடிக்கை மேற்கொள்வதாக உறுதியளிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.



# கைவிடப்பட்ட வாகனங்களில் கணிசமானவை மீள ஒப்படைப்பு

## கிளிநொச்சி அரச அதிபர் அறிவிப்பு



(கொழும்பு)

வன்னியில் இடம்பெற்ற இறுதிக்கட்ட யுத்தத்தின்போது இடம்பெயர்ந்திருந்த பொதுமக்கள் கைவிட்டுச் சென்ற வாகனங்களில் கணிசமானளவு உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் நேற்றுத் தெரிவித்தார்.

மேற்படி வாகனங்களுக்கு உரிமை கோரி வருபவர்களின் எண்ணிக்கை குறைவாகக் காணப்படுவதாகவும் ஏனெனில் பெரும்பாலானவர்கள் யுத்தத்தின்போது உயிரிழந்திருக்கலாம் அல்லது இடம்பெயர்ந்து வேறிடங்களில் தங்கியிருக்கலாமெனவும் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பிரதேச செயலாளரூடாகத் தொடர்புகொண்டு கிராம சேவகர்கள் மூலமாக கைவிடப்பட்ட வாகனங்கள் உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டு வருகின்றன.

சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள்கள், முச்சக்கரவண்டிகள், லொறிகள், பிக்கப் வாகனங்கள், ட்ராக்டர் பெட்டிகள், குளிரூட்டி வாகனங்கள், வான்கள், கன்டர் ரக வாகனங்கள் மற்றும் தெளிகருவி, நீர் இறைக்கும் இயந்திரங்கள் ஆகியன பொது மக்களால் கைவிடப்பட்ட நிலையில் உரியவர்களிடம் ஒப்படைப்பதற்கு எமக்கு கிடைக்கப்பெற்றன.

எவரும் உரிமை கோராத நிலையில் சைக்கிள்களும் நீர் இறைக்கும் இயந்திரங்களும் கரைச்சி, கண்டாவளை, பூநகரி, பச்சிலைப்பள்ளி ஆகிய பகுதிகளில் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. மொத்தமாக 14,557 சைக்கிள்களில் 14,037 சைக்கிள்கள் மீள்குடியேற்றப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

8,254 மோட்டார் சைக்கிள்களில் 1,432 மோட்டார் சைக்கிள்கள் உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இம் மோட்டார் சைக்கிள்கள் கொழும்பிலுள்ள மோட்டார் போக்குவரத்து திணைக்கள ஆணையாளர் ஊடாக வாகன பரிசோதனை மூலம் உறுதிப்படுத்தப்பட்டு உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

29 முச்சக்கரவண்டிகளில் 9 முச்சக்கரவண்டிகள் உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. 24 லொறிகளில் 15 லொறிகள் உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. 110 பிக்கப் வாகனங்களில் 32 உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. 61 ட்ராக்டர் பெட்டிகளில் 17 உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. 9 குளிரூட்டி வாகனங்களில் 4 குளிரூட்டி வாகனங்கள் உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

54 கன்டர் ரக வாகனங்களில் 26 ஒப்படைக்கப்பட்டுள்ளன. 38 வான்களில் 21 ஒப்படைக்கப்பட்டுள்ளன. 620 நீர் இறைக்கும் இயந்திரங்களில் பழுது பார்க்கப்பட்டு 600 நீர் இறைக்கும் இயந்திரங்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. 54 தெளிகருவிகளில் 53 தெளிகருவிகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

அடையாள அட்டை, வாகனப் பதிவு புத்தகம், வாகன உரிமைப் பத்திரம் மற்றும் வாகனங்களுக்கான வரி, காப்புறுதி செலுத்திய ரசீதுகளைக் காட்டி மேற்படி வாகனங்களை உரிமையாளர்கள் பெற்றுச்செல்லலாம் என்றார் அவர்.

# வீதி விபத்தில் ஒருவர் பலி; குழந்தை வாவியில் மூழ்கியது

## - தம்புள்ளையில் சம்பவம் -

(கொழும்பு)

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது, அதன் மீது இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் வண்டியொன்று மோதியதையடுத்து ஒருவர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டார்.

உயிரிழந்தவரின் குழந்தை கந்தலகம வாவியில் வீசப்பட்டது. அவரது மனைவி ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அவரது நிலைமை கவலைக்



கிடமாகவிருப்பதாகப் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. இதே வேளை, கந்தலகம வாவியில் வீசப்பட்ட குழந்தை இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை என அறிவிக்கப்படுகிறது.

## புலிகள் நடத்திய தீவிர...

நாட்டினது சிறுபான்மைத் தமிழர்களுடன் அதிகாரங்களைப் பகிர்வதற்குத் தான் தயார் என இலங்கையினது அதிபர் மகிந்த ராஜபக்ஷ மீண்டுமொருமுறை வலியுறுத்தியிருப்பதோடு நாட்டிலுள்ள தமிழ் கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைவதோடு கூட்டிணைவான நிலைப்பாட்டினை எடுக்கவேண்டியது அவசியமானது எனக் கூறுகிறார்.

கடந்த பல பத்தாண்டுகளாக வன்முறையும் இரத்தக்களரியும் மலிந்துகிடந்த இலங்கைத் தீவில் புதியதொரு வரலாறு எழுதப்படுகிறது.

புலிகள் தொடர்பான எண்ணங்களையும் சிந்தனைகளையும் கொண்டிருந்த தமிழ் மக்கள் தங்களது எதிர்கால நன்மைகருதி அந்த எண்ணங்களிலிருந்து விடுபடுவதோடு அதிகாரப் பகிர்வினை ஏற்றுக்கொள்ளுமாறு அரசாங்கம் அவர்களைக் கோருகிறது.

நாட்டினது சிறுபான்மையினரைப் பிரிவினைவாதப் போக்குடன் தொடர்புபடுத்தும் வெறுப்புணர்வு முடிவுக்குக் கொண்டுவரப்படவேண்டும்.

அத்துடன், நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு ராஜபக்ஷ முன்வைத்திருக்கும் தீர்வுத்திட்டம் வரும் மாதங்களில் வெளியிடப்படவுள்ள நிலையில் அதுவே இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான அவரது உறுதிப்பாட்டிற்கும் நேர்மைக்கும் சான்றாக அமையும்.

புலிகளை இல்லாதொழித்து 20 மாதங்கள் கடந்துவிட்ட நிலையிலும் சிறுபான்மை தமிழ் மக்கள் இன்னமும் தனிமைப்படுத்தப்பட்ட அமைதியற்ற வாழ்வையே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

ஆயிரக்கணக்கானவர்கள் இன்னமும் புனர்வாழ்வு முகாம்களில் வாடிக்கொண்டிருக்கும் நிலையில், அவர்கள் மீண்டும் சமூக வாழ்க்கைக்குத் திரும்புவதே மிகப்பெரிய சவாலாக அமைகிறது.

அதேபோல, ஆயிரக்கணக்கானவர்கள் பயங்கரவாத அமைப்புடனும் சட்டவிரோத அமைப்புக்களுடனும் தொடர்புபட்டமைக்காக தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை இனியும் பயங்கரவாதத்துடன் தொடர்புபட்டவர்களாக நோக்காது, அவர்களிடம் கருணையுடன் நடந்துகொள்ள வேண்டியது அவசியம் ஆகும்.

இவ்வாறு அவர்களை நடாத்துவது துன்பப்பட்ட சிறுபான்மையினத்துடன் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதிலும் அரச நிறுவனங்களில் அவர்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்துவதிலும் உதவும்.

புலிகள் ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்த அதே வேளையில், அரசியல் கலாசாரத்தை இல்லாதொழித்துவிட்டனர் என்பதே மிகவும் துயரமான விடயமாகும்.

பேச்சுவார்த்தைகளிலும் அரசியலமைப்பு நடைமுறைகளிலும் நம்பிக்கை கொண்டிருந்த தமிழ்த் தலைவர்கள் படுகொலை செய்யப்பட்டமை மிகவும் கேடானது.

சிறுபான்மை இனத்தவருக்கு அரசியல் நடவடிக்கைகளில் போதியளவு இடமளிப்பதும் தேசிய நாடாளுமன்றிலும் முன்மொழியப்பட்ட உயர் சபையிலும் அவர்களுக்கு அதிகளவு பிரதிநிதித்துவத்தை வழங்குவதுமே இந்த வெற்றிடத்தை நிரப்புவதற்கான வழியாகும்.

தமிழ் மக்களுக்கும் பெரும்பான்மை சிங்களவர்களுக்கும் அவர்களது சமூக - பொருளாதார பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு உடன்பாடு ஒன்று மட்டுமன்றி நல்லனவற்றுக்காக கடந்தகால கசப்பான சம்பவங்களையும் குழிதோண்டிப் புதைக்கும் பொதுவான மனநிலையைப் பகிர்ந்துகொள்வதும் அவசியமாகும்.

அதிகாரங்களைப் பரவலாக்கும் ராஜபக்ஷவின் நோக்கு, பாராட்டப்படுகின்ற அதேவேளையில் அது இனப்பிளவை வலுப்படுத்துவதற்குப் பதிலாக பொதுவான தேசியத்தைக் கட்டியெழுப்புவதற்கே உதவவேண்டும்.

இந்த அத்தியாவசியமான முயற்சியை நடைமுறைப்படுத்துவதே இன்றைய தேவையாகும் என்றும் அந்த ஆசிரிய தலையங்கத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# யாழில் வேலைவாய்ப்பு மோசடிகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் நிறுவனமொன்றில் பல்வேறு பதவிகளுக்கு வேலைவாய்ப்பு பெற்றுத்தருவதாக கூறப்பட்டு ஏமாற்றப்பட்ட இளைஞர் யுவதிகள் பலர் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா அவர்களைச் சந்தித்து தமது முறைப்பாட்டினைத் தெரிவித்தனர்.

நேற்று மாலை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களின் யாழ். பணிமனைக்கு வருகைதந்த பெருமளவு இளைஞர் யுவதிகள் குறுகிய காலப் பயிற்சி மற்றும் ஆங்கில போதனையின் பின்னர் தமக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படும் என உத்தரவாதம் அளிக்கப்பட்டு பணம் பெறப்பட்டதாகவும், ஆனால் உரிய பயிற்சிகள் மொழிப்போதனைகள் ஒழுங்காக வழங்கப்படாதது மட்டுமன்றி தாம் ஏமாற்றப்பட்டுள்ளதாகவும் கவலையுடன் தெரிவித்தனர்.

அத்துடன் தமக்கு நியாயம் பெற்றுத் தருவதுடன், தாம் ஏமாற்றப்பட்டமை போன்று மேலும் பலரும் ஏமாறாமல் இருக்க அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்தனர்.

மேற்படி விடயம் தொடர்பாக தமது அதிக கவனத்தைச் செலுத்திய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் இவ்விடயத்தினை யாழ்.பொலிஸ் உயரதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு சென்றதுடன், உடனடியாக பாதிக்கப்பட்ட இளைஞர் யுவதிகளை பொலிஸ் நிலையத்திற்குச் சென்று முறைப்பாட்டினை பதிவு செய்யுமாறும் சட்ட உதவிகள் உட்பட ஏனைய அனைத்து உதவிகளையும் தான் மேற்கொண்டு நியாயம் பெற்றுத்தருவதாகவும் உறுதியளித்தார்.

மேலும் படித்த இளைஞர் யுவதிகளான அவர்கள் அவதானமாக இருக்க வேண்டும் என்பதுடன், சுலபமாக வேலைவாய்ப்பு கிடைக்கும் என்ற இப்பேற்பட்ட ஏமாற்றுப் பேர்வழிகளின் சதியில் சிக்கக்கூடாது எனவும் ஆலோசனை வழங்கினார்.

## புலிகளின்...

படையில் வைத்திருந்தனர். அதில் சிலவற்றை முல்லைத்தீவில் இருந்து காங்கேசன்துறைக்கு கடற்படையினர் கொண்டு சென்றுள்ளனர். மணிக்கு 180 தொடக்கம் 200 கிலோ மீட்டர் வேகத்தில் செல்லக்கூடிய சீஸ் ஸ்கூட்டரை மகிந்த 40 மைல் வேகத்தில் ஓடிப்பார்த்துள்ளார்.

கடல்கொந்தளிப்பு அதிகமாக உள்ளதால் அவர் அதனை வேகமாக ஓட்டிப்பார்க்கவில்லை என இராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். புலிகளின் கடற்படை அணியில் இருக்கும் படகுகள், அதிவேக தாக்குதல் திறன்கொண்டவையாக புலிகளால் மாற்றியமைக்கப்படவையாகும். அவ்வாறு மிகவும் வேகமாகச் செல்லக்கூடிய சக்திமிக்க சீஸ் ஸ்கூட்டர்களை புலிகள் வைத்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். இவற்றை ஒரு முறையாவது ஓட்டிப்பார்க்கவேண்டும் என்று மகிந்த ஆசைப்பட்டுள்ளார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

## உள்ளூராட்சி...

தேர்தலில் வன்னி மாவட்டத்தில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு, புளொட் ஆகியன இணைந்து போட்டியிட உள்ளதாக ஏற்கனவே கொழும்பில் நடைபெற்ற இருதரப்புக் கலந்துரையாடலில் இணக்கம் காணப்பட்டிருந்தது. இந்தநிலையில் இச்சந்திப்பு ஓர் ஆரம்ப சந்திப்பாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (28)

யாழ்.மாவட்ட மக்களுக்கு
SEC
ஷாலோம்
SHALOM
SHALOM வழங்கும் நற்செய்தி...!
20/1, 2வது ஒழுங்கை,
பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.
உங்கள் கனவு இல்லங்களையும் ஏனைய கட்டிடங்களையும் மாவட்டத்தின் எந்தப் பகுதியிலும் அழகுற நிர்மாணித்துக்கொள்ள SHALOM நிர்மாணப் பொறியியலாளர்கள் உறுதியான உத்தரவாதமளிக்கிறார்கள்.
குறிக்க தவணைக்குள் .... குறைந்த செலவில்.... நவீன முறையில்...
வீடுகள்-கட்டிடங்கள் அனைத்தையும் அமைத்துக்கொள்ளவும் மாபிள் - ரெறாசோ வேலைகளை நேர்த்தியாக அழகுற செய்துகொள்ளவும் நம்பிக்கையுடன் தொடர்பு கொள்ளுங்கள்
தீவகத்தில்
SHALOM,
சிற்பன வீதி,
வங்களாவடி,
வேலணை.
(C/405)
தொலைபேசி: 0217901798 - 0771044861

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 ஜனவரி 19 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.